
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 18 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 16 | Thursday 18, January, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழிகளில்லை



நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை எனவும், அனைத்து தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு பங்களிக்க வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். பெப்ரவரி மாதத்தின் பின்னர் உலக 06

## ‘அஸ்வெசும’ மலையகத்தில் முழுமையடைய மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்

### இதுவரை 45 சதவீதம் மட்டுமே பூர்த்தி

மலையகத்தில் ‘அஸ்வெசும’ வேலை திட்டம் 45 சதவீதமே நிறைவடைந்துள்ளதாகவும், இத்திட்டம் முழுமையடைய மக்களின் ஒத்துழைப்பும் அவசியமெனவும் வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார்.

‘அஸ்வெசும’உதவி பெறத்தகுதியிருந்தும், பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்படாதுள்ளவர்கள் மற்றும் 06



சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் காலநிலை மாற்றம் தொடர்பான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் (John Kerry) இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவும் உடனிருந்தார்.

## சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய "கொலொம்புர சாரிக்கா"

### 66 வருட வரலாற்றில் இ.போ.ச புதிய சேவை




நாட்டின் சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் விசேட சொகுசு பஸ் சேவையை நடத்த இ.போ.ச திட்டமிட்டுள்ளது. இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ள பல பஸ் வண்டிகள் ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் அவதானிக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் 66 வருட வரலாற்றில் முதல் தடவையாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாவை விரும்பும் இலங்கையர்களை அடிப்படையாகக் கொண்டு இந்த பஸ் சேவையை நடத்துகிறது. 06

# எதிர்கால நோக்குடன் புதிய பொருளாதாரச் சீர்திருத்தம்

### இதற்கான நடவடிக்கையில் இலங்கை மும்முரமாக ஈடுபாடு



**சுவிட்சர்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டு வர்த்தகர்களுடனான சந்திப்பில் தெரிவிப்பு**

### கடன் மறுசீரமைப்பு முன்னேற்றம் குறித்து IMF பாராட்டு எனவும் தெரிவிப்பு

எதிர்கால நோக்குடன் புதிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் இலங்கை வெற்றிகரமான முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், பிரதான கடன் வழங்குநர்கள் கொள்கையளவில் அதற்கு இணங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2023 டிசம்பரில் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கை தொடர்பான வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வுக்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம், 2024 இல் இலங்கை ஸ்திரத்தன்மையிலிருந்து மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு நகர்வதற்கான களம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனம் என்பன இணைந்து (15) சுவிட்சர்லாந்தில் ஏற்பாடு செய்திருந்த வர்த்தகத் துறையினருடனான சந்திப்பில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தின் 54 ஆவது வருடாந்த கூட்டத்துடன் இணைந்ததாக இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது டன், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளில் எட்டப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் குறித்து 06

## விடுதலையாகாமல் இன்னும் 14 தமிழ் அரசியல் கைதிகள்

### விசாரணைகள் முடிந்ததும் தீர்மானம்

**வவுனியா விசேட நிருபர்**



விடுதலையாகாமல் இன்னும் 14 தமிழ் அரசியல் கைதிகளே உள்ளதாகவும், இதுவரை 05 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனரென்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ 06

## மேல்மாகாண வெள்ளத் தடுப்பு திட்டம் பட்ஜட்டில் அரசு ரூ. 2,482 மில். ஒதுக்கீடு

### ஆறு முக்கிய திட்டங்களும் தயாரிப்பு



மேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 2,482 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மேல் மாகாணத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 06

## ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு சூரியகாந்தி எண்ணெய் நன்கொடை

### 1.5 மில்லியன் டொலரில் உலக உணவுத் திட்டம் ஏற்பாடு




ரஷ்யா,1.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சூரியகாந்தி எண்ணெயை நன்கொடையாக வழங்கியுள்ளது. ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது. 06

## துமிந்த சில்வாவின் பொதுமன்னிப்பு உயர் நீதிமன்றத்தினால் இரத்து



### முன்னாள் ஜனாதிபதியின் தீர்மானம் தவறானது என தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்ர படுகொலை சம்பவம் தொடர்பில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த முன்னாள் எம். பி. துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை 06

## கல்வி இராஜாங்க அமைச்சர் இந்தியா பயணம்



கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 06

## ஜா எல, குடாஹக்கபொலயில் ரயில் - கார் கோர விபத்து

### தாய், மகள் உட்பட 04 பேர் படுகாயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜா எல, குடா ஹக்கபொல பகுதியில் காரொன்று, ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாதில் காரில் பயணித்த தாய், மகள் உட்பட நான்கு பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜாஎல பகுதியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் கார் பலத்த சேதத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர். 06

## ஜனாதிபதியின் மன்னிப்பை நிராகரித்து உயர் நீதிமன்றம் வழங்கிய முதலாவது தீர்ப்பு

### துமிந்த சில்வாவுக்கு நடந்தது சுனில் ரட்நாயக்கவுக்கும் கிடைக்க வாதிடுவோம்



இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக ஜனாதிபதியின் பொது மன்னிப்பு செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை வரவேற்கத்தக்கது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வேறு சில வழக்குகளும் நிலுவையில் உள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அவர், குறிப்பாக மிருசுவில் படுகொலை குற்றவாளியான சுனில் ரட்நாயக்கவிற்கு வழங்கப்பட்ட மன்னிப்பையும் சவாலுக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். 06

## மன்னார் தாழ்வுப்பாடில் 18 தமிழக மீனவர் கைது

### விளக்கமறியல் நீடிப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

நாட்டின் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த இந்திய கடற்றொழிலாளர்கள் 18 பேரை, செவ்வாய்க்கிழமை மாலை (16) கடற்படையினர் கைது செய்தனர்.

மன்னார் மாவட்டம் தாழ்வுப்பாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள், சட்டவிரோதமாக நுழைந்து இரண்டு டோலர் 06

## ரூ. 10,000 இலஞ்சம் வாங்கிய இரு பொலிஸ் உத்தியோகத்தர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



10,000 ரூபாவை லஞ்சமாக பெற்ற உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்துள்ளதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இந்த ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில், 06

## அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் ஆளுநர் செந்திலின் காளை வெற்றி




### உதயநிதியிடமிருந்து தங்க நாணயம் பரிசு

அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா தலைவருமான செந்தில் தொண்டமானின் காளை சீறிப் பாய்ந்து வெற்றி பெற்றது.

அமைச்சர் மூர்த்தியினால் அலங்கா 06

## டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு பல்கலைக்கழக மாணவி மரணம்



டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த, 23 வயது பல்கலைக்கழக மாணவி உயிரிழந்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் பயிலும் மாணவி ஒருவரே நேற்று முன்தினம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் மாணவிக்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் அவருக்கு டெங்கு நோய் தொற்று 06

# நகர்வலம்






உற்பத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப

## கல்வியியற் கல்லூரி வளாகங்களில் பயிர்ச் செய்கைக்குத் திட்டம்



உற்பத்திப் பொருளாதாரத்தை ஒரே நாளில் கட்டியெழுப்ப முடியாது. அதற்காக முழு தேசமும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டுமென கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சுக்கு சொந்தமான 19 கல்வியியற் கல்லூரி வளாகங்களிலும் இட வசதிக்கு ஏற்ற வகையில் நாளாந்தம் பயன்படுத்தக்கூடிய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடும் குளிரான காலநிலை உள்ள நாடுகளில் கூட, பனிப்பொழிவு இல்லாத ஆறு மாத காலப்பகுதியில், அடுக்குமாடி குடியிருப்புகளின் தாழ்வாரங்களிலும் தொட்டிகளில் செய்கையில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதாக அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியின் கீழ் நாட்டின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் சூழலில், அரசாங்கம் மற்றும் நாட்டின் ஏனைய நிறுவனங்கள் உட்பட முழு மக்களும் பருவநிலை மாற்றம் போன்ற எதிர்கால அனர்த்த நிலைமைகளை வெற்றிகொள்வதற்கு உரிய முறையில் தயாராக இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதற்காக வரிசையில் நின்று நேரத்தைச் செலவழித்த யுகமும் நினைவுகூரப்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

## இளம் பெண் துஷ்பிரயோகம்; சந்தேகநபரை தேடி வலைவீச்சு

(புத்தளம் நிருபர்)

இளம்பெண்ணொருவரை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக கூறப்படும் சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். 19 வயதுடைய இளம்பெண் ஒருவரே இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் பின்னர் ஏற்பட்ட கடும் அதிர்ச்சியால் அவர் ஏதோ ஒரு வகையான மாத்திரையை உட்கொண்டு தற்போது புத்தளம் ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நவகத்தேகம பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் இளம் பெண் தனது பாட்டியுடன் அப்பகுதியிலுள்ள அறையொன்றில் வாடகைக்கு தங்கியிருந்துள்ளார். ஆனமடுவ நகருக்கு தனது தேவைகளுக்கு பணம் பெற்றுக் கொள்வதற்காக வந்த போது சந்தேக நபரை சந்தித்ததாகவும் அந்த நபரை தனக்கு நன்கு தெரியும் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், அந்த நபர் தன்னை மிகவும் நேசிப்பதாகவும், தன்னுடன் பேச விரும்புவதாகவும் தெரிவித்து ஆளில்லா பகுதிக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு தான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் இளம் பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் தந்தைக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

எனினும் இதுவரை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்யவில்லை.

## இணையவழி பண மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது

இணையவழி பண மோசடி சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணையத்தில் பணம் முதலீடு செய்வதன் ஊடாக அதிகளவான வருமானம் ஈட்டலாம் என தூண்டி தனியார் வங்கிக் கணக்கொன்றுக்கு பணத்தை வைப்பிலிட வைத்து 1,680,000 ரூபாவை மோசடி செய்ததாக சந்தேகநபர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் விசாரணை நடத்தப்பட்டு நேற்றுமுன்தினம் (16) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை சிறிமல்கொட பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அயோத்தி ராமர் கோவில் குடமுழுக்கு

## கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் விசேட பிரார்த்தனை

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில், அயோத்தி ராமர் கோவில் குடமுழுக்கு தொடர்பில் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தினமும் மாலை 7.00 மணிக்கு விசேட பிரார்த்தனை (பாராயணம்) நடைபெற்று வருகிறது.

இதில் கலந்து கொண்டு ஸ்ரீராமபிரானின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள ஸ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தியாவில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க அற்புதமான ஸ்ரீராமர் கோவில் கும்பாபிஷேக விழா எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.33க்கு நடைபெறவுள்ளது. உலகெங்கும் அமைதியும், செழிப்பும் ஏற்பட வேண்டும் என்று இந்த மங்களகரமான கும்பாபிஷேக வேளையில் பகவான் ஸ்ரீராமச்சந்திரரை வேண்டி பல்வேறு நாடுகளில் பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஓர் அம்சமாகவே கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்திலும் இந்த விசேட பிரார்த்தனை நடைபெறுகிறது.




தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் கேப்டன் விஜயகாந்த்தின் மறைவையொட்டி பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சென்னை சாலிகிராமத்திலுள்ள கேப்டன் விஜயகாந்த்தின் இல்லத்துக்கு சென்று அவரது திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவருடைய மனைவி பிரேமலதாவை சந்தித்து தனது ஆறுதலை தெரிவித்துள்ளார். இதன்போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பார்த்தசாரதி, திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது மற்றும் பலர் உடன் இருந்தனர். (படங்கள்: திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

## சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் பீ.ஜெனட் ராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேத்தாப்பலை பங்கின் அருட் சகோதரர் பிரசங்க, புத்தளம் வலய ஆசிரிய ஆலோசகர்களும், கற்பிட்டி கோட்ட ஆசிரிய ஆலோசகர்களும், ஓய்வுப் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து மாணவர்களை கௌரவித்தனர்.




மாணவர்களால் பாடசாலைக்கு பெற்றுத்தரப்பட்ட வெற்றியானது ஒரு வரலாற்று சிறப்புமிக்க சாதனையாகும். இதுவரை காலமும் பாடசாலையில் அனைத்து மாணவர்களும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்கவில்லை. இம்முறை ஒரே தடவையில் பரீட்சை எழுதி 09 பாடங்களிலும் சித்தி பெற்று 100% வெற்றியை பெற்றுத் தந்தமை வரலாற்று சாதனையாக கருதப்படுகிறது.

## மஸ்கெலியா தாய்மார் சங்கத்தினருக்கு பரிசில்கள் வழங்கிவைப்பு

நுவரெலியா தினகரன் நிருபர்



மஸ்கெலியா கிளன்டில் தோட்டத்திலுள்ள தாய்மார் சங்கத்தினர் அண்மையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற சுய உதவிக்குழுக்களுக்கான போட்டியில் வெற்றி பெற்று முதலிடத்தை பெற்றுள்ளனர்.

இவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன்போது கடந்த 2022 ஆம் ஆண்டு கொரோனா காலப் பகுதியில் மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சந்தரராஜன் தாய்மார்களுக்கு சுய தொழிலை ஏற்படுத்தும் வகையில் பல வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளார். இதன் பலனாக மஸ்கெலியா கிளன்டில் தோட்ட தாய்மார் சங்கம் (25) அனைவருடைய ஒத்துழைப்புடன் தற்பொழுது தங்களுக்கான சுய வருமானத்தை பெற்றுக்கொள்வதில் வெற்றி பெற்று மலையக பெண்களுக்கு ஒரு உதாரணமாக அமைந்துள்ளனர்.

இதனை தெரிந்து கொண்ட டென்மார்க் நாட்டில் வசிக்கும் ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னை அண்மையில் திரு, திருமதி ரகுசிங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஆதித்தனின் பிறந்த நாளை முன்னிட்டு தாய்மார் சங்க உறுப்பினர்களுக்கு பரிசில்களையும் பகல் போசனத்தையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினர்.

## ஹோட்டல் உரிமையாளரை தாக்கிய யாசகருக்கு விளக்கமறியல் உத்தரவு

கொழும்பு போக்குவரத்து பொலிஸ்நிலையத்துக்கு அருகிலுள்ள ஹோட்டல் உரிமையாளரின் மனைவியை தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட யாசகரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 13 வருடங்களாக மதிய உணவு வழங்கி வந்த ஹோட்டல் உரிமையாளரின் மனைவியை கடுமையாக தாக்கிக் காயப்படுத்திய யாசகரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மார்ட்டின் லியனகே என்ற யாசகரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், அவரின் மனநல அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாசகருக்கு தினமும் சாப்பாடும் பானமும் கொடுத்து வந்திருக்கின்றார். யாசகர் மஹியங்கனைக்கு அருகிலுள்ள முதியோர் இல்லத்திலிருந்து தப்பிச் சென்றவராவார், இவர் சாப்பாடு தாமதமாகியதால் ஆத்திரமடைந்து, கடை உரிமையாளரின் மனைவியின் தலையில் சரமாரியாக தாக்கியதாக பாதிக்கப்பட்டவர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## ரவூப் ஹக்கீம் எம்.பி – இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன் சந்திப்பு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் சாஹிப்பை திருச்சியிலுள்ள அவரது இல்லத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடினார். தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவரும், மாநில முதன்மை துணைத் தலைவருமான எம்.அப்துல் ரஹ்மான் ஆகியோர் இச்சந்திப்பில் உடன் இருந்தனர்.



இதன்போது இந்தியா, இலங்கை உடனான நட்புறவு, உலகளாவிய அரசியல், சிறுபான்மை மக்களுக்கான செயற்றிட்டங்கள் மற்றும் இலங்கை பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மேலும் இச்சந்திப்பில் திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கே. எம். கே. ஹபீபுர் ரஹ்மான், மாணவர் அணி மாநில அமைப்பாளர் ஏ. எம். எச். அன்சர் அலி, மாவட்ட துணைத் தலைவர் ஏ.கே.அலாவுதீன், இளைஞர் அணி மாவட்ட செயலாளர் பேரா. மைதீன் அப்துல் காதர், மகளிர் அணி மாவட்ட தலைவர் ஆரிஃபா, காஜா நகர் பிரைமரி தலைவர் கே. எம். கே. பைசூர் ரஹ்மான், மணிச்சுடர் ஊடகவியலாளர் திருச்சி எம். கே .ஷாகுல் ஹமீது மற்றும் ஸ்ரீலங்கா பவன்பீடி குழும உரிமையாளர் மகன் சிவா வடிவேல் ஆகியோர் உடனிருந்தனர்.





கண்டி NDB வங்கியில் (16) நடைபெற்ற பொங்கல் விழாவின் போது பூஜை இடம்பெறுவதையும், இவ்வங்கியின் முகாமையாளர் திருமதி அனுபமா கன்கானம்கேக்கு காளாஞ்சி வழங்கப்படுவதையும், கண்டி தமிழ் வர்த்தகர் சங்க பிரமுகர்களையும், வாடிக்கையாளர்களையும் படங்களில் காண்கிறீர்கள். (படங்கள்: இரா.அ. இராமன்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின்

# கடன் உதவி இல்லாமல் ரயில்வே துறையை மேம்படுத்த முடியாது"





இரத்மலானையில் உள்ள ஜேர்மன் ரயில்வே தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் ரயில்வே இணை அலகு (Simulater) கட்டடத்திற்கான அடிக்கல், நடும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் ரயில்வே வினைத்திறனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ்,இத்திட்டம் நடைமுறைக்கு வருகிறது.இதற்கென, 45 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

நாட்டின் ரயில்வே வரலாற்றில் முதல் தடவையாக 48 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இக்கட்டடத்தில், சகல வசதிகளுடன் எஸ், 14 இயந்திரத்தின் மாதிரியான இந்த அலகு, ரயில் பாதைகள் மற்றும் சிக்னல் அமைப்புகளுடன் நிறுவப்படவுள்ளது.

06

அரச மற்றும் அரச அனுசரணை

# பாடசாலைகள் பெப்ரவரி 05இல் ஆரம்பமாகிறது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் இரண்டாவது தவணையும் இறுதிக்கட்ட கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் பெப்ரவரி 05இல், ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை விவசாய, விஞ்ஞான கேள்விப் பத்திரத்தின் 1, 2ஆம் பகுதி பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கும் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.இதனால்,

இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் தினங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சானது 2023 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை விடுமுறையை கடந்த டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் பெப்ரவரி 02 வரை ஏற்கனவே அறிவித்திருந்தது.




எனினும், கல்வி பொது தராதர உயர்தர விவசாய விஞ்ஞான வினாத்தாள் பகுதி ஒன்று மற்றும் இரண்டுக்கான பரீட்சைகளை மீள நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்ததால், இத்தினங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

தமிழக எதிர்க்கட்சி தலைவர்

# எடப்பாடி பழனிசாமியுடன் அமைச்சர் ஜீவன் சந்திப்பு

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமிக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் நேற்று (17) சந்திப்பு நடைபெற்றது.

சென்னையிலுள்ள முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் "செல்வந்தி" இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், முன்னாள் அமைச்சரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் கே. ராஜுவும் பங்கேற்றிருந்தார்.

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இச்சந்திப்பின்போது எதிர்க்கட்சி தலைவருக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக தமிழர்களின் மேம்பாட்டுக்காக அ.தி.மு.க. தொடர்ந்தும் குரல் கொடுத்துவருவதற்கு நன்றிகளையும் தெரிவித்தார்.



அத்துடன், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்கும் வகையில் நடத்தப்பட்ட நாம் 200 நிகழ்ச்சி குறித்தும், எதிர்வரும் 21 ஆம் திகதி மலையகத்தில் நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழா தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இலங்கைக்கு குறிப்பாக மலையக பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளுமாறும் எடப்பாடி பழனிசாமிக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

## விற்றோ Gas பங்குகள் விற்பனை; டெண்டர் கோர அரசு தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

லிற்றோ கேஸ் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக டெண்டர்களை கோருவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லிற்றோ கேஸ் லங்கா லிமிடெட் மற்றும் லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவேட் கம்பெனி ஆகியவற்றின் பெரும்பான்மை பங்குகள் அல்லது முழுமையான பங்குகளை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால், டெண்டர் கோர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லிற்றோ கேஸ் லங்கா லிமிடெட்டின் 99.93 வீத பங்குகளும் லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவேட் கம்பெனியின் முழுமையான நூறு வீத பங்குகளும் அரசாங்கத்துக்குச் சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் பெருமளவு பங்குகளையோ அல்லது முழுமையான பங்குகளையோ விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு ச.தொ.ச தீர்மானம்

வற்வரி அதிகரிக்கப்பட்ட போதிலும் சில பொருட்களின் விலையை அதிகரிக்காமல் விற்பனை செய்ய, ச.தொ.ச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

சவர்க்காரம், வாசனை திரவியங்கள், முகப்பூச்சு மற்றும் சிறு குழந்தைகளுக்கு தேவையான பொருட்கள் ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமென, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

வற் வரி பதினெட்டு சதவீதமாக அதிகரிக்கப்பட்டமையால், சந்தையில் சில பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுக்திய விசேட சுற்றிவளைப்பு 24 மணி நேரத்தில் 1,024 பேர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் குற்றவாளிகள் மற்றும் பாதாள உலகக் கும்பலை கைது செய்யும் வகையில், முன்னெடுக்கப்பட்டுள்ள யுக்திய சுற்றிவளைப்பில், நேற்று அதிகாலை வரையான 24 மணி த்தியாலங்களில் 1024 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதானவர்களில் 13 பேரை தடுத்துவைத்து விசாரணை செய்யும் உத்தரவை பெற்றுள்ளதாகவும் போதைப்பொருளுக்கு அடிமையான எட்டு நபர்களை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தேடப்படும் பட்டியலிலுள்ள சந்தேக நபர்கள் 45 பேரும் இச்சுற்றிவளைப்பில் கைதாகியுள்ளதாகவும் தலைமையகம் தெரிவித்துள்ளது. மேலும்,குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பட்டியலில் உள்ள 325 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் 92 பேரும் போதைப்பொருள் தவிர்ந்த ஏனைய குற்றங்களுக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த மேலும் 211 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த தலைமையகம் தெரிவித்துள்ளது.

## இரத்து செய்யப்பட்ட விவசாய விஞ்ஞான பரீட்சை மீண்டும் 01இல்.

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் இரண்டாவது தவணையும் இறுதிக்கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இம்முறை கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை விவசாய விஞ்ஞான கேள்விப் பத்திரத்தின் 1, 2ஆம் பகுதி தொடர்பில் பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட தீர்மானம் காரணமாகவே இந்த பாடசாலை ஆரம்ப தினங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய விஞ்ஞான வினாத்தாள் வெளியாகிய சம்பவம் தொடர்பில் தகவல்கள் கிடைத்ததோடு பரீட்சைகள் திணைக்களம் கடந்த 12ஆம் திகதி அந்த 1, 2 வினாத்தாள்களை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்தது.

06


## கிறிப்டோ முதலீட்டு மோசடிகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்

கிறிப்டோ முதலீடுகள் தொடர்பில் இடம்பெறும் மோசடிச் செயற்பாடுகள் எச்சரிக்கையான மட்டங்களுக்கு உயர்வடைந்துள்ளமை இந்நாட்களில் முக்கிய கரிசனையொன்றாகக் காணப்படுகின்றது. உங்களது நிதியங்களைப் பாதுகாப்பதற்கும் விழிப்புடன் இருப்பதற்கும் மோசடிக்காரர்கள் மூலம் பயன்படுத்தப்படுகின்ற சூழ்ச்சி முறைகள் பற்றி விழிப்புணர்வுடன் இருப்பது அத்தியாவசியமாகும்.

### மோசடிசெய்வோர் எவ்வாறு இயங்குகின்றனர்

உயர்வான ஆதாயங்கள் பற்றியும் அவர்கள் ஈட்டிய வருவாய்கள் பற்றி அடிக்கடி பெருமைபேசியும் விளம்பரம் செய்வதற்கு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி மோசடிக்காரர்கள் பல்வேறு சூழ்ச்சி முறைகளைப் பயன்படுத்துகின்றனர். சட்டபூர்வமானது என்ற பொய்யான உணர்வை இது உருவாக்கி புதிய பங்கேற்பாளர்களை ஈர்க்கின்றது. மேலும், பலியாகுபவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு மோசடிக்காரர்கள் வட்ஸ்அப், டெலிகிராம் போன்ற தளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

மோசடியான விளம்பரங்கள் தொழில்சார் பண்புமிக்க வலைத்தளங்களைப் போல் தோன்றி, அவர்களது மோசடித் தன்மையினை மறைப்பதை இலக்காகக் கொள்கின்றன. சில மோசடிக்காரர்கள் பொய்யாக அமைக்கப்பட்ட இத்தளங்களில் அதிக வருவாயினை உழைத்தல் அல்லது கிறிப்டோ நாணயங்களை வர்த்தகம் செய்தல் பற்றிய தவறாக வழிநடாத்துகின்ற தகவல்களை வழங்குகின்ற வகுப்புக்களை அல்லது விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துவதன் மூலம் மேலும் ஒருபடி செல்கின்றனர்.

முதலீடு செய்யப்பட்டதன் பின்னர் மோசடிக்காரர்கள் நிதியங்களை சடுதியாக முடக்கலாம் அல்லது மேலும் ஆட்களை ஈர்ப்பதற்கு தொடர்ந்தும் ஏமாற்றை முன்னெடுக்கலாம். உங்களது முதலீடுகளை உரிமை மாற்றுவதற்கு முயற்சிக்கும்வரை மோசடியொன்றுக்கு நீங்கள் இரையாகிவிட்டீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளாதிருக்கலாம் என்பதை அறிந்திருப்பது அத்தியாவசியமாகும்.

### மோசடிகளிலிருந்து நீங்களாக பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

கிறிப்டோ நாணயங்கள் இலங்கையில் ஒழுங்குபடுத்தப்படுவதில்லை, சட்ட பூர்வமானதாகக் கொள்ளப்படுவதில்லை, ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான பாதுகாப்புக்கள் அற்றதாகும். கிறிப்டோ நாணயத்தைப் பயன்படுத்துவதுடன் இணைந்த குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கரிசனைகள் பற்றி ஊடக அறிக்கைகள் வாயிலாக இலங்கை மத்திய வங்கி வலியுறுத்துகின்றது.

கிறிப்டோ முதலீடுகளின் அடிப்படையில் உயர்வான ஆதாயங்களுக்கு வாக்குறுதியளிக்கின்ற நிதியியல் மோசடிகளின் அதிகரிக்கின்ற எண்ணிக்கைகள் பற்றி பொதுமக்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய மோசடிகள் மரபுரீதியான ஒழுங்குமுறைப்படுத்தல் பாதுகாப்புக்களை தவிர்த்து பாடுபட்டு உழைத்த பணத்தை ஆட்கள் இழந்துவிடுவதற்கு இட்டுச்செல்கின்றன.

### எச்சரிக்கைச் சமிஞ்சைகளை அடையாளங்காணுதல்

முதலிடுவதற்கு உங்களை அவசரப்படுத்துவதாக உணர்கின்ற அல்லது யாதார்த்தைவிட உயர்வான ஆதாயங்களை வாக்குறுதியளிக்கின்ற எதிர்பாராத செய்திகள் உங்களுக்குக் கிடைக்கப்பெறுமெனில் அவதானமாக இருங்கள். முதலீடொன்று நம்பமுடியாதளவிற்கு ஆதாயமிக்கதாகவிருக்குமாயின் அநேகமாக அதுவொரு மோசடி என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.

### மோசடிகளுக்கு பதிலிறுத்தல்

மோசடி பற்றி சந்தேகப்படுவீர்களாயின் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவியுங்கள். நீங்கள் பாதிக்கப்பட்டிருபீர்களாயின் பின்தொடர் முயற்சிகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். வேறுபட்ட திட்டங்களுடன் அல்லது இழந்த கட்டணங்களை மீளளிப்பதற்கான சலுகைகளுடன் மோசடிக்காரர்கள் மீளவும் தோன்றலாம்.

### இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனை: உங்கள் நிதியங்களைக் காத்துக்கொள்ளுங்கள்

இணையத்தளத்தில், பல்வேறு ஊடகங்கள் வாயிலாக அல்லது தனிப்பட்ட ஆட்களிடமிருந்து நீங்கள் சந்திக்கும் ஏதேனும் கிறிப்டோ நாணயத் திட்டங்களில் ஈடுபடுவதற்கெதிராக இலங்கை மத்திய வங்கி வன்மையாக எச்சரிக்கின்றது. கிறிப்டோ நாணயத் தொழிற்பாடுகள், ஆரம்ப நாணயக் குற்றி வழங்கல்கள் (Initial Coin Offerings), வார்த்தல், பரிமாற்றுதல், வைப்பு ஏற்றுக்கொள்ளல் அல்லது கட்டுக்காவல் சேவைகள் அல்லது கிறிப்டோ நாணயத்துடன் தொடர்புடைய ஆலோசனைப் பணிகள் போன்ற செயற்பாடுகளுக்காக ஆட்களுக்கு அல்லது வியாபாரங்களுக்கு இலங்கை மத்திய வங்கி உரிமங்களை வழங்கவில்லை அல்லது அதிகாரமளிக்கவில்லை என்பதனை வலியுறுத்தி அது பல எண்ணிக்கையான ஊடக அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

### இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படும் நடவடிக்கை

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக தடைசெய்யப்பட்ட திட்டங்களை பல்வேறு நிறுவனங்கள் நடாத்துகின்ற அத்துடன்.'.அல்லது நடாத்தியதாக இலங்கை மத்திய வங்கி நிர்ணயித்துள்ளதுடன் இவற்றுக்கு மத்தியில் குறிப்பாக, பின்வரும் நிறுவனங்கள் மறைகுறிநாணயங்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதாக அறியப்பட்டன.

1. Sport Chain App, Sports Chain ZS Society Sri Lanka
2. OnmaxDT
3. MTFE App, MTFE SL Group, MTFE Success Lanka (Pvt) Ltd and MTFE DSCC Group (Pvt) Ltd.

### நிதியியல் உளவறிதல் பிரிவு வழங்கும் செய்தி

விழிப்பாக இருங்கள், அறிந்திருங்கள், உங்களது நிதியியல் நல்வாழ்வை காத்திடுங்கள். ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயற்பாடு பற்றி உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் விழிப்பாக இருப்பது கிறிப்டோ முதலீட்டு மோசடிகளை முறியடிப்பதில் வேறுபாடொன்றினைத் தோற்றுவிக்கலாம்.

பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி
இல.30., சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 04ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்

குறைகளைச் சொன்னவுடனே சான்றோரிடம் கோரி பயனைப் பெற முடியும்; ஆனால் கயவரிடமோ கரும்பை நசுக்கிப் பிழிவதுபோல், போராடித்தான் கோரிய பயனைப் பெற முடியும்.

# அப்பாவி நோயாளர்களை பாதிக்கும் நடவடிக்கை!

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இலங்கையில் இலவச சுகாதார சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச்சேவையின் நிமித்தம் விசாலமான பௌதீக கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ள இத்துறை மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர் உட்பட பல்துறைகளுக்குமான சிற்றூழியர்கள் என பெருந்தொகை ஆளணியினரையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அரச செலவில் முற்றிலும் இலவசமாக இச்சேவை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் பயனாக இந்நாடு சுகாதாரத் துறையில் பாரிய முன்னேற்றங்களை அடைந்து கொண்டுள்ளது. இதற்கு அனைத்துத் தரப்பினரும் அளித்துவரும் பங்களிப்புக்கள் எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வருடா வருடம் கோடானு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த இலவச சுகாதார சேவை சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அதன் விளைவாக மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தார்கள். உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களைக் கூட இடைநிறுத்தும் நிலைமைக்கு நாடு உள்ளாகியது.

இருப்பினும் இலவச சுகாதார சேவைக்கான நிதியொதுக்கீடு நிறுத்தப்படவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்த போதிலும் நாட்டின் சுகாதார சேவை ஸ்தம்பிதமடைய இடமளிக்கப்படவுமில்லை. அந்தளவுக்கு கடும் அர்ப்பணிப்போடு இச்சேவை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார நெருக்கடி காலத்தில் நாடும் மக்களும் முகம்கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஆனாலும் அவற்றின் தாக்கங்கள் காணப்படவே செய்கின்றன. அதனால் இந்நெருக்கடியின் தாக்கங்களையும் அதன் விளைவாக மக்கள் முகம்கொடுத்துள்ள அசௌகரியங்களையும் கருத்தில் கொண்டு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகரிப்பு தொகையை முதற்கட்டமாக ஐயாயிரம் ரூபா ஏப்ரல் மாதம் முதல் வழங்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அரச ஊழியர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இத்தொகையை ஜனவரி மாதம் முதல் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பை கோரி 72 மணித்தியாலய வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை நேற்றுமுன்தினம் முதல் முன்னெடுத்துள்ளன. அதனால் வைத்தியசாலைகளின் வழமையான சேவைகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகள், கிளினிக்குகள் உள்ளிட்ட பிரிவுகளின் வழமையான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. இப்பாதிப்புக்கள் அப்பாவி நோயாளர்களுக்கு தாக்கமாக அமைவதைத் தவிர்க்கும் வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, பேராதனை போதனை வைத்தியசாலை உள்ளிட்ட 41 வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் ஊடாக இவ்வேலைநிறுத்தத்தின் விளைவான தாக்கங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம், சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை, தாய்சேய் கிளினிக் சேவை, கண் பரிசோதனை, பற்சிகிச்சை, மருந்துப்பொருட்கள் விநியோகம் உள்ளிட்ட சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இவ்வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கை நியாயமற்றது என்பதே அனைத்து தரப்பினரதும் கருத்தாகும். நாடு கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் சூழலான போதிலும் அரசாங்க ஊழியர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அப்படியிருந்தும் 35 ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி வேலைநிறுத்தத்தை முன்னெடுப்பது நியாயப்படுத்த முடியாதது. அதுவே மக்களின் கருத்தாகும். தங்களது கோரிக்கையை அடைந்து கொள்வதற்காக சுகாதார தொழிற்சங்கங்கள் அப்பாவி நோயாளர்களைப் பணயக் கைதிகளாக கொள்வது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்நாட்டின் அண்மைக்கால தொழிற்சங்க வரலாற்றில் இவ்வாறான அதிகபட்ச கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையே இது.

ஆகவே தொழிற்சங்கங்கள் தம் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதை விடுத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து அப்பாவி நோயாளர்களையும் சுகாதார சேவையையும் பாதிக்கப்பட துணைபோகலாகாது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் தீங்காகவே அமையும். மக்களின் கருத்தும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# வெள்ளித்திரைக்கு அப்பால் மக்களின் இதயங்களை வென்றவர் எம்.ஜி.ஆர்

## 107 ஆவது பிறந்ததினத்தில் இந்தியப் பிரதமர் புகழாரம்

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க நிறுவனத் தலைவருமான காலஞ்சென்ற எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்தநாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எம்.ஜி.ஆருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக மக்களால் மக்கள் திலகம், புரட்சித் தலைவர் என்று அழைக்கப்பட்டவர் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இலங்கையில் கண்டி அருகில் உள்ள நாவலப்பிட்டியில் 1917 ஜனவரி 17 ஆம் திகதி பிறந்த எம்.ஜி.ஆர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் திராவிட சிந்தனையால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை 1953இல் இணைத்துக் கொண்டார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நெருங்கிய நண்பராக தனது அரசியல் வாழ்வை தொடங்கிய எம்.ஜி.ஆர், பின்னாளில் கருணாநிதியுடன் ஏற்பட்ட பிணக்கினால் தி.மு.கவில் இருந்து பிரிந்து அ.தி.மு.கவை தொடங்கினார்.

எம்.ஜி.ஆர் 1977 இல் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றார். 1987 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் தமிழக முதல்வராக பதவி வகித்தார் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது நல்ல பல திட்டங்களை செயல்படுத்தினார் எம்.ஜி.ஆர். மேலும், ஏழைகளுக்கு பல்வேறு உதவிகள் செய்தவராக இன்றளவும் போற்றப்படுகிறார்.

இந்நிலையில் எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று அரசியல் தலைவர்களாலும், தொண்டர்களாலும் அவர் நினைவுகூரப்பட்டார். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அமரர் எம். ஜி.ஆரின் பிறந்தநாளன்று நாம் அவருடைய வாழ்க்கையை நினைவுகூர்ந்து அனுஷ்டிப்போம்.

அவர் தமிழ் சினிமாவின் உண்மையான அடையாளம். தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர். அவருடைய திரைப்படங்கள் சமூக நீதியையும், பிறர் துன்பத்தைக் கண்டு விலகாமல் துணை நிற்கும் உணர்வுகளையும் கடத்தின. அவர் வெள்ளித்திரைக்கு அப்பால் மக்களின் இதயங்களை வென்றெடுத்தார்.

ஒரு தலைவராக, முதல்வராக அவர் மக்கள் நலனுக்காக அயராது உழைத்தார். தமிழகத்தின் வளர்ச்சியில், மேம்பாட்டில் நீங்காத தடம் பதித்தவர். அவருடைய பணிகள் இன்றளவும் நம்மை ஊக்குவிக்கக் கூடியவை" என்று தெரிவித்துள்ளார்.



# கல்முனை மாநகர திண்மக் கழிவகற்றல் பொறிமுறை விருது பெற்ற யூ.எம். இஸ்ஹாக்

கல்முனை மாநகரசபையின் திண்மக் கழிவற்றல் செயற்பாட்டினை சிறப்பான பொறிமுறையின் கீழ் மேற்கொண்டமைக்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த யூ.எம்.இஸ்ஹாக் 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த சேவையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வின் போதே இச்சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக மாற்றி, ஊழியர்கள் சேவைப் பொருத்தத்தை மேம்பாடு அடைய வைக்கும் நோக்கில் 16 வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான சேவை நலன் கௌரவிப்பு விருது வழங்கப்பட்டுள்ளது. 35 முகாமைத்துவ உதவியாளர்களில் யூ.எம்.இஸ்ஹாக் மாத்திரம் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டமை சிறப்பம்சமாகும். 12 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் ஐம்பத்து ஐயாயிரம் குடியிருப்பாளர்களைக் கொண்ட கல்முனை மாநகரசபை எல்லைக்கான திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகள் தினமும் நடைபெற்று வருகின்றன. சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தகுதி வாய்ந்த அதிகாரியாக கடந்த ஒரு வருட காலமாக நியமனம் பெறாத நிலையில் அவ்வெற்றிடத்தை நிரப்பக் கூடிய விதத்தில் முன் வந்து பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றியமைக்காகவே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பணியாளர்களுடன் நல்லுறவைப் பேணி, சிறப்பான சேவை மக்களைச் சென்றடைய முகாமைத்துவ உதவியாளர் இஸ்ஹாக் மேற்கொண்டுள்ள பணி பாராட்டப்பட்டு வருகின்றது. 1995 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற இவர் நிந்தவூர், மூதூர், கல்முனை உள்ளிட்ட பிரதேசங்களில் 23 வருடங்கள் சேவையாற்றியுள்ளதுடன், நேர முகாமைத்துவம் மற்றும் அரச நியதிகளுக்கேற்ப பணியாற்றும் திறன் என்பவற்றால் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் திகழ்கிறார்.

எடுத்த காரியத்தை முடிக்கும் திறன்கொண்ட இஸ்ஹாக் பகுதி நேர ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகின்றார்..இவர் நற்பிட்டிமுனை உமர் கத்தா_ ஆசியா உம்மா தம்பதிகளின் புதல்வராவார்.

ஜெஸ்மி எம். மூஸா
பெரிய நீலாவணை தினகரன் நிருபர்



# ஜம்இய்யதுல் உலமா அட்டாளைச்சேனை கிளையினால் சிநேகபூர்வ கலந்துரையாடல்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் அட்டாளைச்சேனை கிளையின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச முக்கியஸ்தர்களுடனான சிநேகபூர்வ கலந்துரையாடல் அண்மையில் அட்டாளைச்சேனை பீச் ஹவுஸில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான மௌலவி யூ.எம்.நியாஸி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு இலங்கை அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி ஏ.சீ.முகம்மது பாக்கவி,

அக்கரைப்பற்று அபூவக்கர் சித்தீக் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எம்.கலாமுல்லாஹ் (றசாதி) பிரதம வளவாளராக கலந்து கொண்டு இஸ்லாமிய நடைமுறைகள் பற்றிய பல்வேறுபட்ட விளக்கங்களை இங்கு முன்வைத்தனர்.

இதன் போது அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் கல்வி, கலை, கலாசாரம், சமூக விழுமியங்கள், போதைப்பொருள் ஒழிப்பு, மாணவர்களின் ஒழுக்க நடைமுறைகள், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் புத்திஜீவிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் உலமாக்கள் உட்பட ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், இக்குழுக்கள் ஊடாக பிரதேசத்தில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளரும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான என்.ரீ.நஸீர், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், உதவி கல்விப்பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.ஏ.றசீட், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் யூ.எம்.வாஹிட், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ. பாயில், கல்விமான் எஸ்.எல்.எம்.பழீல், டொக்டர் கே.எல்.எம். நக்பர், அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி மற்றும் மூத்த உலமாக்கள், அட்டாளைச்சேனை பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் மற்றும் அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் பதவிவழி உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






முகம்மது றியாஸ்
ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

# சவூதி தலைமையில் உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றம்

உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றத்தை சவூதி அரேபியாவின் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையம் (SDAIA) எதிர்வரும் பெப்ரவரி 2 முதல் 13 வரை சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடத்தத் தீர்மானித்துள்ளது. எரெனா என்ற கண்காட்சிகளுக்கான அரங்கத்தில் நடைபெறவிருக்கும் இம்மன்றத்தில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 80 பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வைப் பற்றி, SDAIA இன் தலைவர் கலாநிதி அப்துல்லா பின் ஷரஃப் அல்கம்டி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த உலகளாவிய மன்றமானது ஸ்மார்ட் நகரங்கள் என்றால் என்ன என்பது பற்றியும் அவற்றின் முக்கியத்துவத்தையும் புரியவைக்கும் வகையில் அமையவுள்ளதோடு, இந்த நகரங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் தெளிவூட்டவுள்ளது" எனக் கூறினார்.

சவூதி அரேபியாவின் பிரதமர் மற்றும் SDAIA இன் இயக்குநர்கள் குழுவின் தலைவருமான பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் வழங்கியுள்ள வழிகாட்டலுக்கு இணங்கவே இந்த மன்றத்தை ஏற்பாடு செய்வதில் இராச்சியம் ஆர்வம் காட்டியதாகவும் அவர் கூறினார்.

தரவுகள் மற்றும் AI அமைப்பு, மேம்பாடு மற்றும் சவூதியில் அதன் செயற்பாடுகளுக்கான தேசியக் குறியீடாக SDAIA இன் முக்கியப் பங்கையும் அவர் எடுத்துரைத்தார்.

மேம்பட்ட தொழில்நுட்பங்களின் துரித வளர்ச்சியை அங்கீகரிக்கும் விதத்தில் உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் தங்கள் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த AI போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தியும் அவற்றை மேம்படுத்தியும் வருகின்றன. இதற்கு சவூதி அரேபிய இராச்சியமும் விதிவிலக்கல்ல.

ஸ்மார்ட் நகரங்களின் எதிர்காலம் பற்றிய கலந்துரையாடல், அவற்றின் உள்கட்டமைப்புடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்தல் மற்றும் உலகெங்கிலும் உள்ள நகரங்களில் வளர்ந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான புதுமையான தீர்வுகளை ஆராய்வதுடன் சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகளை இம்மன்றம் கொண்டிருக்கும். மேலும், 2030 ஆம் ஆண்டுக்கான ஐ.நாவின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) இணங்க, ஸ்மார்ட் நகரங்களை நிறுவுவதில் சவூதி மற்றும் பிறநாடுகள் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் இம்மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது. இம்மன்றமானது 18,00 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை நேரிலும் நிகழ்நிலையிலும் ஒன்றுசேர்த்து நடத்தவுள்ளதோடு, ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் AI தொழில்நுட்பங்களை நிர்மாணிப்பதில் நிபுணத்துவம் பெற்ற உலகெங்கிலும் உள்ள நிபுணர்களை ஒன்றிணைக்கும் வகையில் ஸ்மார்ட் நகரங்களுக்கான உலகளாவிய தளத்தையும் நிறுவுகிறது.

உலகளாவிய நகரங்கள், நகர்ப்புற நடமாட்டத்தின் எதிர்காலம், ஸ்மார்ட் பொதுச் சேவைகள், அடுத்த நூற்றாண்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையிலன நகரங்களை உருவாக்குவதற்கான திட்டமிடல், மேம்படுத்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை இம்மன்றத்தில் கலந்துரையாடவுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு AI மற்றும் தொழில்நுட்பவியலோடு சம்பந்தப்பட்ட சவூதியின் இவ்வாறான முன்முயற்சிகள் அனைத்தும் அந்நாட்டின் விஷன் 2030 திட்டத்திற்கமைவாகவே இடம் பெறுகின்றன.



SDAIA
الهيئة السعودية للبيانات والذكاء الاصطناعي
Saudi Data & AI Authority

காலித் ரிஸ்வான்

# கிழக்கின் குரல்



## ஜனாதிபதித் தேர்தலில்
# தமிழ் மக்கள் கட்சி பேதங்களை மறந்து பொருத்தமான ஒருவரை தெரிவுசெய்ய வேண்டும்

(ஆரையம்பதி தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்கள் ஒருமித்து கட்சிக் கொள்கை பேதங்களை மறந்து பொருத்தமான ஒருவரை தெரிவுசெய்யவேண்டுமென வர்த்தக இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்கள் என இலங்கை வாழ் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒருமித்து கட்சிக் கொள்கை பேதங்களுக்கு அப்பால் எமது உரிமைகளுக்கும், அபிவிருத்திக்கும் தீர்வு காணக்கூடிய நேர்மையான ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்.



கடந்த கால ஜனாதிபதி தேர்தல்களை நாம் பார்க்கின்ற பொழுது சரத் பொன்சேகாவை தமிழ் தலைமைகளும் ஆதரித்தன. தமிழ் மக்களையும் ஆதரிக்க வைத்தனர். இருந்தபோதும் சரத் பொன்சேகா அத்தேர்தலில் வெற்றி பெறவில்லை. இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் ஆதரித்தனர். அவர் வெற்றி பெற்றார். எனினும் அவரை ஆதரித்த தமிழ் தலைமைகளால் எமது மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது. எனவே கடந்தகால ஜனாதிபதி தேர்தல்கள் தமிழ் மக்களுக்கு ஒரு சிறந்த படிப்பினை. அவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு எமது மக்கள் தீர்க்கதரிசனமாக சிந்தித்து வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் பொருத்தமான ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். அதற்காக கண்மூடித்தனமாக ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் பொருளாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டிருந்த போது அவருடைய பொறுப்பை ஏற்று நாட்டை வழிநடத்த யாரும் முன்வரவில்லை. எனினும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக தைரியத்துடன் ஆட்சியை பொறுப்பெடுத்து, பணிகளை முன்னெடுத்தார்.

நீண்ட வரிசையில் அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் நின்றனர். அனைத்து பொருட்களுக்கும் இருந்த தட்டுப்பாட்டை நீக்கினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இப்பணி பாராட்டத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம்


(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்று கிரியைகள் ஆரம்பமாகி 18,,19,20 ஆகிய மூன்று தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெற்று எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபைத்தலைவர் வே.செவ்வேள் தெரிவித்தார்.



# குருக்கள் மடத்தில் வாகன விபத்து; ஒருவர் உயிரிழப்பு
## இருவர் படுகாயம்



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட குருக்கள் மடம் பகுதியில் முச்சக்கரவண்டி, லொறியுடன் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் களுவாஞ்சிக்குடி பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியும் மட்டக்களப்பு பகுதியிலிருந்து கல்முனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞன் மண்டூர் பகுதியை சேர்ந்தவர் எனவும் காயமடைந்தவர்கள் மண்டூர் மற்றும் எருவில் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மின்விளக்குகள் இல்லாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

(தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தோப்பூர் சந்தியிலிருந்து மூதூர் பெரிய பாலம் வரையிலான மட்டக்களப்பு திருகோணமலை A15 பிரதான நெடுஞ்சாலையில் தெரு மின்விளக்குகள் இல்லாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவு நேரங்களில் இப்பகுதி வீதி இருள்மயமானதாக காட்சிதருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ்வீதியூடாக இரவு நேரங்களில் சென்றுவரவேண்டிய பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இரவு நேரங்களில் மிக தொலைத்தூர இடங்களிலிருந்து இவ்வீதியூடாக மூதூர் தளவைத்தியசாலைக்கு நோயாளர்களைக் கொண்டுசெல்லவேண்டிய நிலைமைகள் ஏற்படும் போது பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு வீதி விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்த விபரங்கள் சேகரிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான தரவுகள் பிரதேச செயலகங்கள் ரீதியாக திரட்டப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் தெரிவித்தார்.

வடகீழ் பருவ பெயர்ச்சி மழை மற்றும் சேனநாயக்க நீர்ப்பாசன குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் அம்பாறை மாவட்டத்தில் சேதமடைந்த உட்கட்டுமானம், அரச கட்டடங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், வீதிகள், மதகுகள், தனியார் சொத்துகள், வீடுகள் போன்றவை தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விவசாய உதவி ஆணையாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஆகியோரிடமும் பாதிப்பு தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன.

மீள் கட்டுமான பணிகளை முன்னெடுப்பதற்காக சேத விபரங்கள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தம் தொடர்பான சேத விபரங்களை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

# கிண்ணியாவில் நடமாடும் சேவை

(கிண்ணியா மத்திய நிருபர்)

ஜனாதிபதியின் சிந்தனையில் உருவான 'புதிய நாடு புதிய கிராமம்' என்ற தொனிப்பொருளின் கீழ் நடமாடும் சேவையொன்று நேற்று கிண்ணியா பிரதேசத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரின் அறிவுரைக்கமைவாக, கிண்ணியா பிரதேச செயலாளரின் தலைமையில் உப்பாறு மற்றும் பைசல் நகர் ஆகிய கிராம சேவகர் பிரிவு மக்களுக்காக இந்நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது கிண்ணியா பிரதேசத்தில் இடம்பெற்ற மூன்றாவது நடமாடும் சேவையாகும்.

இதில் மக்களுக்கான தேவைகளான வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், தேசிய அடையாள அட்டை, காணி, முதியோர் மற்றும் பொலிஸ் சான்றுப் பத்திரம் பெறுதல் தொடர்பான ஏராளமான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் எம்.எச். முகமது கனி தெரிவித்தார்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் துப்புரவு பணிகள் முன்னெடுப்பு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன் துப்புரவு பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கினர்.

சீரற்ற காலநிலை மற்றும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள அதேவேளை பல்கலைக்கழகத்துக்குள் அவசர நிலையை பிரகடனப்படுத்தி சகல தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வளாகத்தில் துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா, எம்.ஜி.எச். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம். ரீ.எம். தாஜுதீன், செயலாளர் எம். எம்.முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் இணைந்திருந்தனர்.

வெள்ள அனர்த்தம் காரணமாக பல்கலைக்கழகத்தின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் அறிவுறுத்தல்கள், ஊழியர்களின் ஒத்துழைப்பு காரணமாக பாரிய சொத்து இழப்புக்கள் ஏற்படவில்லையென உபவேந்தர் தெரிவித்தார்.

மேலும் சேத விபரங்கள் தொடர்பில் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன், சேதங்கள், மீள் கட்டுமானம் மற்றும் எதிர்கால அனர்த்த தவிர்ப்பு திட்ட வரைபுகள் தொடர்பில் விரைவில் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.




அம்பாறை மாவட்ட இலக்கிய விழாவில் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப்பாளர் ஓய்வு நிலை கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் கண்ணன் இராஜரெத்தினத்துக்கு 'கலைஞர் சுவதம்' விருது அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரமவினால் வழங்கிவைக்கப்பட்டது. (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# பாடசாலை தளபாடங்கள் அன்பளிப்பு

தோப்பூர் பாத்திமா பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட சல்மா மகளிர் வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவிகளின் நன்மை கருதி 20 கதிரைகளும் 10 மேசைகளும் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வித்தியாலய அதிபர் முகம்மது முகைதீன் நசீர் தலைமையில் நடைபெற்றது.

# கிழக்கு மேய்ச்சல்தரையில் அத்துமீறல்; அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையில் அத்துமீறிய விவசாய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே முரளிதரனிடம் மகஜரொன்றை கையளித்தனர்.

பண்ணையாளர்களின் கால்நடைகளை சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மயிலத்தமடு, பெரிய மாதவனை கால்நடை கமநல அமைப்பின் தலைவர் நிமலன் தலைமையில் வருகை தந்த குழுவினர் குறித்த மகஜரை கையளித்துள்ளனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் பொலிஸ் உயர் அதிகாரிகள், மதத்தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




அம்பாறை மாவட்ட இலக்கிய விழா அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு அல் ஷக்கி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் "பிராணிகளுக்கு அன்பு காட்டுவோம்" எனும் தலைப்பில் சிங்கள மொழியில் உரையாற்றிய அல் மனார் மத்திய கல்லூரி மாணவி பாத்திமா அஸ்லினுக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## எதிர்கால நோக்குடன் புதிய...

ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகளுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இலங்கை குறிப்பிடத்தக்க செயற்திறனைப் பெற்றுள்ளதாக தெரிவித்ததையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவு கூர்ந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும், கடன் வழங்குநர்களை கையாள்வதில் அவ்வாறான ஒத்துழைப்பு அவசியம் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளிட்ட முதலீடுகள், ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். இலங்கை எதிர்கொண்ட அண்மைய பொருளாதார நெருக்கடியானது வர்த்தகங்கள், சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, வர்த்தகத்திற்கான தடைகள் மட்டுமன்றி மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகத்துக்கான இடையூறுகளை அகற்றுவதற்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புளையும் இங்கு சுட்டிக்காட்டினார்.

இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியது, வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களில் பணப்புழக்கத்தை மீளமைத்து மற்றும் 1977க்குப் பின்னர் முதல் முறையாக கொடுப்பனவுகளின் முதன்மை இருப்பு மேலதிக நிலைக்கு பதிவு செய்யப்பட்டது உள்ளிட்ட பல விடயங்களை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து நிதி ஸ்திரத்தன்மை ஏற்படல், பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் மறைப் பெறுமான பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் உள்ளிட்ட சாதகமான குறிகாட்டிகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023 ஆம் ஆண்டில் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகத்தை எட்டுவது குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் அடையாளம் என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய தெற்காசிய நாடுகளுடனான வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) இணைவதற்கான இலங்கையின் முன்முயற்சி மற்றும் ஐரோப்பிய சந்தையை அணுகுவதற்கு GSP+ வழங்கும் நன்மைகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, விவசாய நவீனமயமாக்கல், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்றவற்றில் அரச தனியார் பங்காளித்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டுக்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சந்தை பிரவேசத்தை மேம்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் குறித்தும் ஜனாதிபதி குறிப்பிட்டார். முதலீடு மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி விக்ரமசிங்க வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்தார். இதேவேளை, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார மற்றும் அரச துறைகளை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசாங்கம் பல விரிவான மாற்றங்களை ஆரம்பித்துள்ளதாகவும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தீர்க்கமான நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த செயல்முறை நிறைவடையும் வரை காத்திருக்காமல், அதற்கு முன்னர் இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆரம்ப நடவடிக்கைகளுக்குப் பின்னர், நிர்வாகச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான ஒரு விரிவான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது ஊழல் எதிர்ப்புச் சட்டம் போன்ற முக்கியமான சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சாகல ரத்நாயக்க மேலும் வலியுறுத்தினார். ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டிய ஆணையாளர்களை அரசியலமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கும் செயல்முறையையும் அவர் விளக்கினார்.

## ஜனாதிபதியின் வேலைதிட்டத்தை...

வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாகவும், அதனை சீர்குலைக்க சில தரப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளை இனங்கண்டு தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (16) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, “இலங்கையைப் போன்று சுமார் 75 அரசியல் கட்சிகள் இருக்கும் நாடு உலகில் வேறு எங்கும் இல்லை. அதனால், நம் நாட்டில் பிளவுகள் உருவாகியுள்ளன. இது நாட்டில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் பல அழிவுகளுக்கும் வழிவகுத்தது. இந்த கட்சிகளுக்கு எப்படி பணம் கிடைக்கிறது? யார் செலவு செய்கிறார்கள் என்பதை கண்காணிக்க எந்த முறைமையும் இல்லை. எனவே, இந்தக் கட்சிகள் எவ்வாறு தேர்தலில் பணத்தை செலவிடுகின்றன என்பதை கண்டறியக் கூடிய சட்ட மூலத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார். மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார். அதற்குக் காரணம், அதலபாதாளத்திற்குச் சென்ற நாட்டை சுமார் ஒரு வருடமும் ஆறு மாதங்களில் மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு சென்றமையாலாகும். ஜனாதிபதி ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்தையும் இந்த நோக்கத்திற்காக திறம்பட பயன்படுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அத்துடன் 2020ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட எமது கட்சியின் விஞ்ஞாபனம், நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால், அவர்கள் தோற்கடித்த விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எரிபொருள், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி அனுபவிக்கின்றார்கள் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த ஆவணத்தால்தான், இன்று நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் அதனைப் படிக்க வேண்டும்.

இனி ஒருவரையொருவர் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை. அந்தத் திட்டத்தால் இன்று மக்கள் வரிசையில் நிற்காமல் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

## விடுதலையாகாமல் இன்னும்...

தெரிவித்தார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்துக்கு நேற்று (17) விஜயம் செய்த நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஸ, ஆலய பரிபாலனசபை மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பு என்பவற்றின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலையாகாதுள்ளோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைஇடம்பெற்று வருகின்றன. கந்தக்காடு முகாமில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அங்கு புனர்வாழ்வு பெறுபவர்கள், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மூன்று பிரிவுகளாக கந்தக்காடு முகாம் இயங்கி வருகின்றது. அங்கு இடம்பெற்ற சம்பவங்களையடுத்து அதன் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. அது, இளம் சமுதாயத்தையும் பாதித்துள்ளது. யுக்திய நடவடிக்கை மூலம் போதைப் பொருள் விற்பனை மற்றும் போதைப் பொருள் மாபியாக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. அத்துடன், அரசியல் கைதிகள் விடயத்தில் 05 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 14 அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசப்படுகிறது.

யாருக்கு ஆதரவு என கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குள் பேசுகிறார்கள். இன்னும், யார் வேட்பாளர் என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. கட்சியுடன் கலந்துரையாடியே அது தொடர்பில் முடிவு எடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

## துமிந்த சில்வாவின் பொதுமன்னிப்பு...

வழங்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்கி உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

அந்தவகையில் மேற்படி மனுதாரரான துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை, நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உச்ச நீதிமன்றம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மரணமடைந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்ரவின் மனைவியான சுமனா பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்ர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான சட்டத்தரணி கசாலி ஹுசேன் ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையையடுத்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகளின் இணக்கப்பாட்டுடன் உச்ச நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேனவினால் நேற்றைய தினம் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பை வெளியிட்டு நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன இது தொடர்பில் தெரிவிக்கையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கும் போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எந்த சட்டபூர்வ முறைமையையும் பின்பற்றவில்லை என தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் போது முன்னாள் ஜனாதிபதி மக்கள் நம்பிக்கைக்கு முரணான விதத்தில் செயற்பட்டுள்ளதாகவும் அந்த தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மனுதாரருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டிருந்த விடயங்கள் நீதிமன்றத்தினால், ஏற்றுக்கொள்ள முடியாததென்றும் அவர் தெரிவித்திருந்தார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்ர படுகொலை சம்பவம் தொடர்பில் குற்றவாளியான துமிந்த சில்வா உள்ளிட்ட பிரதிவாதிகள் தரப்பினருக்கு கொழும்பு மூவரடங்கிய நீதிபதிகள் குழுவில் பெரும்பான்மை தீர்மானம் மரணதண்டனை விதிப்பதாகவே அமைந்தது.

அந்த தண்டனைக்கு எதிராக பிரதிவாதியினால் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், அந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு மூலம் துமிந்த சில்வாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மரண தண்டனை வழங்கப்பட்டிருந்த துமிந்த சில்வாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவி னால், அரசியலமைப்பின் படி அவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்துக்கு அமைய பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு தீர்மானித்தார். அந்த மன்னிப்பை வழங்கும் போது எந்தவொரு சட்ட ரீதியான முறைமையும் முன்னாள் ஜனாதிபதி பின்பற்றியிருக் கவில்லை. இந்த வகையில் அவர் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்றும் தீர்ப்பு வழங்குமாறுகோரி சுமணா பிரேமச்சந்ர, ஹிருணிகா பிரேமச்சந்ர மற்றும் சட்டத்தரணி கசாலி ஹுசேன் ஆகியோர் மனுவை தாக்கல் செய்திருந்தனர். அதற்கிணங்கவே நீதிமன்றம் நேற்று மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள நியதிகள் இங்கு உரிய வகையில் பின்பற்றப்படவில்லை என வழக்குத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தம்முடனான நட்பு மற்றும் அரசியல் காரணமாக துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தீர்மானித்திருந்ததாக நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது.

## மேல்மாகாண வெள்ளத் தடுப்பு...

இந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி மேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையை கட்டுப்படுத்த, 06 பிரதான திட்டங்களின் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இவ்வருடம் பெரிய கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 292 மில்லியன் ரூபாவாகும்.

இத்திட்டம் 2012 ஆம் ஆண்டு உலக வங்கியின் உதவியுடன், உள்ளூர் நிதியுடன் கொழும்பில் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட பணத்தில், நொரிஸ் கால்வாய் உப திட்டத்தின் மீதமுள்ள பணிகளும், ஒருங்கிணைந்த மழை நீர் முகாமைத்துவ அமைப்பின் மீதமுள்ள பணிகளும் முடிக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அம்பத்தளை நீரேற்று நிலையம், மாதிவெல கிழக்கு வளைவு, டொரிங்டன் சுரங்கப்பாதை அபிவிருத்தி உள்ளிட்ட 54 உப திட்டங்கள், கடந்த வருடம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் மன்னிப்பை நிராகரித்து...

எனினும், அந்தத் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் முல்லைத்தீவு, மாங்குளம் நீதிமன்றத்திற்கு பொதுமக்களின் காணிப் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்திருந்தபோது, ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ துமிந்த சில்வாவிற்கு வழங்கிய பொது மன்னிப்பையே நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.

அது தவறான வகையில் சட்டவிரோதமாக வழங்கப்பட்ட மன்னிப்பு என்றும் அந்த வகையில் அது செல்லுபடியற்றது என்றும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## டெங்கு நோய் தாக்கம்...

ஏற்பட்டுள்ளமையை வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர். தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவி, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இதேவேளை, கொத்துரொட்டியை உண்டு விட்டு உறங்கச் சென்ற பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்றும் ஹொரணை – வல்பிட்ட பகுதியில் பதிவாகியுள்ளது.33 வயது மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். இப்பெண் சில காலமாக உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சுற்றுலாப் பயணிகளுக்காக...

ஆரம்ப கட்டத்தில், கொழும்பை மையமாக கொண்டு நான்கு சுற்றுலா வலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, இது ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த பஸ் வண்டிகளுக்காக சிறப்புப் பயிற்சி பெற்ற சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

முன்னோடித் திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில், இலங்கை போக்குவரத்துச் சபையின் நிர்வாக அதிகாரசபை, நாடு முழுவதிலும் உள்ள சுற்றுலா வலயங்களை அடிப்படையாகக் கொண்டு பேருந்து சேவையை விரிவுபடுத்த எதிர்பார்க்கிறது.

## ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு...

கொழும்பில் உள்ள உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புத் தரப்பு செயலகவளாகத்தில் (16) அரசாங்கத்திடம் இந்நன்கொடை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. 2023 டிசம்பர் 30ஆம் திகதி 117.3 மெட்ரிக் தொன் சூரியகாந்தி எண்ணெயும், 2024 ஜனவரி 04 ஆம் திகதி 13.1 மெட்ரிக் தொன் எண்ணெயும் ரஷ்ய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

## மன்னார் தாழ்வுப்பாடில்...

படகுகளில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

கைதான 18 கடற்றொழிலாளர்களும், அவர்கள் பயன்படுத்திய இரண்டு இழுவைப் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுப்பாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டன.

அதன் பின்னர் 18 கடற்றொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் நேற்று (17) புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் இவர்களை ஆஜர்படுத்தினர்.

18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 திகதி வரை (31/1/2024) விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் (17) மாலை உத்தரவிட்டார்.

## ரூ. 10,000 இலஞ்சம்...

நாரம்மல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் முன்வைத்த முறைப்பாட்டையடுத்து, நபர் ஒருவரின் வீடு சோதனையிடப்பட்டது. மதுபானம் மற்றும் கசிப்பு ஆகியவை அவ்வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டன. இதையடுத்து, வீட்டுரிமையாளர் கைது செய்யப்படவிருந்த வேளையில், இதிலிருந்து தப்பிக்க மேற்படி இவர்களுக்கு லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதை,பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் பெற்றுள்ளனர். இதையடுத்தே இவர்கள் கைதாகினர். மேலும், லஞ்சம் வழங்கியவரையும் அதிகாரிகள் கடந்த (16) கைது செய்தனர்.

## இன்றைய பலன்கள்

**( 18. 01. 2024 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தந்தை வழி உறவில் இருந்த விரிசல் தானாக விலகும். சிந்தனைகள் வெற்றி பெறும் விதத்தில் செயல்பாடுகள் இருக்கும்.

**ரிஷபம்:**
தேவைக்கேற்ற பணம் தேடி வந்து சேரும். விரையங்கள் வீண் விரயங்களாக மாறாமல் இருக்க நீங்களாகவே சுப விரயங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்:**
பிரச்சினைகள் படிப்படியாக குறையும். கல்யாணம் போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**கடகம்:**
திசா புத்தி பலம் பெற்றிருக்குமேயானால் நல்ல மாற்றங்கள் வரலாம். இல்லையேல் இதயத்திற்கு இனிமை தராத விதத்தில் மாற்றங்கள் வந்து சேரும்.

**சிம்மம்:**
நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். ஆதரவு கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி:**
உழைப்பு கூடுதலாக இருந்தாலும் ஊதியம் குறைவாக இருக்கும். உடல் நிலைகளிலும் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு மருத்துவ செலவு அதிகரிக்கச் செய்யும்.

**துலாம்:**
உறவினர்களின் மனஸ்தாபங்கள் மாறும். பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடி நிலை அகலும் .பொருளாதார வளர்ச்சி உண்டு.

**விருச்சிகம்:**
பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி புரியும் இடத்தில் நல்ல பெயர் புகழ் கிடைக்கும்.

**தனுசு:**
ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே நடைபெறும். தொழில் வளர்ச்சி உண்டு.

**மகரம்:**
கொடுக்கல் வாங்கல்களில் ஒரு சில தடைகள் ஏற்பட்டு அகலும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் நல தொல்லைகள் ஏற்பட்டு மருத்துவ செலவுகள் உருவாகும்.

**கும்பம்:**
திருமணம் முயற்சி கைகூடும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். அதிகார வர்க்கத்தினர் ஆதரவோடு இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும்.

**மீனம்:**
நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் உண்டு. தொழிலாளர்களுக்கு பழைய தொழிலை விடுத்து புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும்.

## கடன் உதவி இல்லாமல்...(03ஆம் பக்க தொடர்ச்சி)

*ஒரே நேரத்தில் எட்டு சாரதிகளுக்கும் ஒரு பயிற்றுவிப்பாளருக்கும் தேவையான வசதிகள் இங்கு அடங்கியுள்ளன. அதே வேளை ரயில்வே துறையின் தலைமைப் பொறியியலாளர் அலுவலகத்தின் புதிய வாகன சேவை மத்திய நிலையத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.*

*இங்கு பேசிய அமைச்சர்,"தற்போது, தொழில்நுட்பமும் அறிவும் நாம் நினைப்பதை விட மிக வேகமாக முன் னே றி வருகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் 66 வீதம் பாதிப்படைவதாக தெரிவிக்கப்படுகிறது.*

*அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இதன் பாதிப்பு 40% வீதம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*இவ்வாறான சூழ்நிலைகளின் அடிப்படையில் இளம் தலைமுறையினருக்கு எதிர்காலத்திற்கு ஏற்ற தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சிகளை வழங்காமல் இருப்பது நமது நாட்டை மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளும்.*

*ஆங்கிலேயர்களே ரயில்வே சேவையை இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், தற்போது, ரயில்வே சேவையில், நம்மை வி ட, இந்தியா அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது.*

## இரத்து செய்யப்பட்ட...(03ஆம் பக்க தொடர்ச்சி)

*அந்தவகையில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வெளியிட்ட அறிக்கையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி பரீட்சை வினாத்தாள் முதல் பகுதியை ரத்து செய்ய தீர்மானித்ததாக குறிப்பிட்டிருந்தார்.*

*அதற்கிணங்க இம்முறை க.பொ.த. உயர்தர விவசாய விஞ்ஞான பாடத்துக்கான வினாத்தாளின் இரண்டாவது பகுதிக்கான பரீட்சை பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் முற்பகல் 11.40 மணிவரை மீண்டும் நடத்தப்படவுள்ளது. முதலாவது பகுதி பெப்ரவரி 01ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிமுதல் 3.00 மணிவரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## கல்வி இராஜாங்க அமைச்சர்...

24ஆம் திகதி வரை, இந்தியாவின் மும்பையில் நடைபெறவுள்ள சர்வதேச தரம்வாய்ந்த கல்வி தொடர்பான மாநாட்டில், கௌரவ அதிதியாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் பங்குபற்றவுள்ளார்.

## ஜா–எல,குடாஹக்கபொலயில்...

ஜா–எல, குடஹாகபொல ரயில் நிலையத்துக்கருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.காரில் ஒரு தம்பதியுடன் தாய் மற்றும் மகளும் பயணித்துள்ளனர். திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்களே, இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் நால்வரும் கம்பஹா பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர். கட்டுநாயக்கவுக்கு எரிபொருளை ஏற்றிச் செல்லும் ரயிலே,நேற்று காருடன் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 'அஸ்வெசும' மலையகத்தில்...

உள்வாங்கபட்டும் இன்றளவும் பணம் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளவர்கள் பிரதேச செயலகத்துக்குச் சென்று மீண்டும் விண்ணப்பிக்குமாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார். நேற்று (17) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பெருந்தோட்ட தொழிலாளர்கள் மட்டுமல்ல மலையகத்திலுள்ள அஸ்வெசும பெறுவதற்கு தகுதியானவர்கள், எவராக இருப்பினும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றார்.

## அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில்...

நல்லூரில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜல்லிக்கட்டுப் போட்டியில், வெற்றிபெற்ற செந்தில் தொண்டமானின் காளைக்கு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்தங்க நாணயத்தை பரிசாக வழங்கினார். செந்தில் தொண்டமான் இதைப் பெற்றுக் கொண்டார்.




# மலையகப் பகுதிகளை நோக்கி படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்

(ஹட்டன் விசேட நிருபர்)






விடுமுறையை கழிப்பதற்காக பெருமளவான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மலையகப் பகுதிகளை நோக்கி கடந்த சில தினங்களாக ரயில்களில் வருகை தருவதாக, ரயில் நிலைய பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

மலையகத்தில் எல்ல, நுவரெலியா, பதுளை, சிவனொளிபாதமலை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்காகவே இச்சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள் வசதி கருதி ஹட்டன் ரயில் நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக நடைபாதை வர்த்தகம் சூடு பிடித்துள்ளதாக, நடைபாதை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு மலையகத்தை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் அவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென, நலன்விரும்பிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# மஸ்கெலியாவில் வேலியில் சிக்கிய சிறுத்தை மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)



மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டு மஸ்கெலியா தோட்ட முகாமையாளர் மாளிகைக்கு அருகிலுள்ள வேலியில் இனந்தெரியாதோரால் இடப்பட்ட வலையில் சிக்கிய சிறுத்தையொன்று மீட்கப்பட்டுள்ளதாக, நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். சிறுத்தையொன்று வலையில் சிக்கியதை அவதானித்த தோட்டத் தொழிலாளர் ஒருவர் உடனடியாக உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்ததை தொடர்ந்து, இது தொடர்பாக நல்லதண்ணி வனப் பாதுகாப்பு அதிகாரிகளின் கவனத்துக்கு அந்த உரிய அதிகாரிகள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்துக்கு நல்லதண்ணி வனப் பாதுகாப்பு அதிகாரிகள் சென்று வலையில் சிக்கிய சிறுத்தையை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

ரந்தெனிகலை மிருக வைத்திய சாலையின் வைத்திய குழுவினர் அழைக்கப்பட்டு, சிறுத்தைக்கு மயக்க மருந்து ஊசி ஏற்றி, சிறுத்தையை பாதுகாப்பாக மீட்டுள்ளதாகவும் ரந்தெனிகலை வைத்திய சாலைக்கு சிறுத்தையை கொண்டு சென்றுள்ளதாகவும், நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பதுளை மாவட்ட

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பதுளை கச்சேரியில் நேற்று புதன்கிழமை நடைபெற்றதுடன், இதில் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.முசம்மில், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், ஜனாதிபதி ஆலோசகர் வடிவேல் சுரேஸ், இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் தேனுக்க விதானகமகே மற்றும் பதுளை மாவட்ட அரசாங்க திணைக்களங்களின் ஆணையாளர்கள், பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகளெனப் பலர் கலந்து கொண்டனர்.

பதுளை மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள், அங்கு நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகள் ஆராய்ந்தனர்.

# சீத்தாஎலிய சீதை அம்மன் ஆலயத்தில் தைப்பூச வழிபாடுகள்

(நுவரெலியா தினகரன் நிருபர் )





நுவரெலியா சீத்தாஎலிய சீதை அம்மன் ஆலயத்தில் தைப்பூச பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

சீதா அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற தைப்பூச பூஜையில், மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆஞ்சநேயப் பெருமான் வீதியால் வலம் வந்ததுடன், சீதை அம்மன் புனித தீர்த்தத்தில் பக்தர்கள் புனித நீராடி விசேட பூஜைகளிலும் கலந்து கொண்டனர். இதன் பின்னர், அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதேவேளை, மலையகத்தின் அனைத்து பெருந்தோட்டப் பகுதிகளிலும் மார்கழி மாதத்தில் இராம பக்தர்களால் முன்னெடுக்கப்படுகின்ற இராமர் பஜனை நிறைவும் நடைபெற்றது. இதன்போது சீதை அம்மன் ஆலயத்துக்கு பக்தர்கள் சென்று, பஜனை பாடினர். இந்நிலையில், தைப்பூச பூஜை வழிபாடுகள் இனிதே நிறைவுற்றது.

# காணி, காணி உறுதி வழங்கக் கோரி தலவாக்கலை மக்கள் மனு கையளிப்பு

## ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் ஏற்பாடு

(லிந்துலை நிருபர்)

200 வருடகால வரலாற்றை கொண்டு வாழ்ந்து வரும் மலையக மக்களாகிய தாம் சொந்த நிலத்தில் வாழக்கூடிய வகையில் காணி வழங்கி, அதற்கான உறுதிப்பத்திரத்தையும் வழங்க வேண்டுமெனக் கோரி தலவாக்கலை பிரதேச செயலகத்தில் மலையக மக்கள் நேற்று மனுக்களை ஒப்படைத்துள்ளனர்.

கண்டியை மையமாகக் கொண்டியங்கும் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் எனும் அமைப்பின் ஏற்பாட்டிலேயே தலவாக்கலை பிரதேச செயலகத்தில் அவர்கள் மனுக்களை ஒப்படைத்தனர்.

டயகம, அக்கரப்பத்தனை, லிந்துலை ஆகிய பிரதேசங்களிலிருந்து சென்ற சுமார் 60 பேர் தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை, தலவாக்கலை பிரதேச செயலாளரிடம் நேரடியாக ஒப்படைத்தனர்.

# சிறுத்தை தாக்கி இளைஞர் படுகாயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர் )

பலாங்கொடை, பொல்கேல்ல பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை (17) சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளாகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த இளைஞரின் முகம் உட்பட பல்வேறு உறுப்புகளில் காயங்கள் ஏற்பட்ட நிலையில், அவர் பலாங்கொடை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொறியில் சிக்கிய இந்த சிறுத்தையை பார்வையிடச் சென்றபோதே, இந்த இளைஞர் இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளார்.

பொறியில் சிக்கிய நிலையில் மிகவும் வேதனையுடன் இருந்த இந்த சிறுத்தை, இந்த இளைஞரின் மீது சீறிப் பாய்ந்து தாக்கியுள்ளதாக, சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சிறுத்தை தப்பிச் செல்லும் வகையில் கம்பியால் இணைக்கப்பட்ட பொறியை பிரதேச மக்கள் இலகுபடுத்தியதை அடுத்து, சிறுத்தை பக்கத்திலுள்ள காட்டுக்குள் தப்பிச் சென்றது. எனினும், சிறுத்தை மீண்டும் வரலாமென்ற அச்சத்தில் தாம் இருப்பதாக, பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# வனராஜா பிரதேசத்தில் நவீன பஸ் தரிப்பிடம் திறந்துவைப்பு

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)



மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நோட்டன் – ஹட்டன் பிரதான வீதியை அண்டிய சவுத் வனராஜா பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நவீன பஸ் தரிப்பிடம் நேற்று மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

ஹட்டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உப தலைவர் எம்.உதயகுமாரின் வேண்டுகோளுக்கிணங்கவும் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் பாராக்கிரம திசாநாயக்கவின் பரிந்துரைக்கமையவும் மேற்படி பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.

இப்பஸ் தரிப்பிட திறப்பு விழாவில் ஹட்டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளரும் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான மு.ராம், நோர்வூட் சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் அணில் பிரசன்ன, வனராஜா பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச பொதுமக்களாகிய பலர் கலந்து கொண்டனர்.

# கண்டியில் உச்சத்தை தொட்ட மரக்கறி விலை

(அக்குறணை குறூப் நிருபர்)





கண்டி மாவட்டத்தில் மரக்கறி வகைகளின் விலை நேற்று புதன்கிழமை அதி உச்சத்தை தொட்டுள்ளதாக, நுகர்வோர் தெரிவித்தனர்.

பொதுவாக, சாதாரண மரக்கறிகளின் விலை ஒரு கிலோகிராம் 1,000 ரூபாவுக்கும் அதிகமாக காணப்படுவதாகவும் கரட், போஞ்சி, சலாது போன்றவை சில இடங்களில் ஒரு கிலோகிராம் 2,000 ரூபாவுக்கும் தாண்டி விற்பனை செய்யப்பட்டதாகவும், நுகர்வோர் தெரிவித்தனர்.

பலாக்காய், பூசணிக்காய், வல்லாரை, பொன்னாங்காணி போன்ற விலை குறைந்த மரக்கறிளையே தாம் தெரிவுசெய்து கொள்வனவு செய்வதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

பொதுவாக, வெண்டிக்காய் ஒரு கிலோகிராம் 300 ரூபா அல்லது 400 ரூபாவை தாண்டுவதில்லை. நேற்றையதினம் ஒரு கிலோகிராம் வெண்டிக்காய் 1,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதாகவும், நுகர்வோர் தெரிவித்தனர்.

இந்நிலையில், மரக்கறிகளை கொள்வனவு செய்வோர் 78 சதவீதத்தால் குறைந்துள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

# சிவனொளிபாதமலைக்கு இம்முறை அதிகளவான பக்தர்கள் வருகை

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)


இம்முறை தைப்பொங்கல் வார இறுதி விடுமுறையுடன் சிவனொளி பாதமலை யாத்திரையில் பெருமளவான யாத்திரிகர்கள் பங்கேற்றதாக, நல்லதண்ணி பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் சாந்த வீரசேகர தெரிவித்தார். ஹட்டனிலிருந்து சிவனொளிபாதமலைக்கு அதிகளவான யாத்திரிகர்கள் ரயில் மற்றும் பஸ் வண்டிகளில் நல்லதண்ணிக்கு வந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, போதைப்பொருள் தொடர்பான சோதனையில் பல பொலிஸ் குழுக்கள் பல இடங்களில் இணைந்திருந்தன. நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'யுக்திய' நடவடிக்கையால், சிவனொளிபாதமலைக்கு போதைப் பொருள் கொண்டு செல்லும் நடவடிக்கை குறைந்து உள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# உடுவர 17ஆம் கட்டை பிரதேச வீதியில் தடைப்பட்ட போக்குவரத்து வழமைக்கு

(ஊவா சுழற்சி நிருபர்)

கொழும்பு – பதுளை வீதியில் உடுவர 17ஆம் கட்டைப் பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வீதித் தாழிறக்கம் காரணமாக மூடப்பட்டிருந்த வீதி எட்டு நாட்களுக்கு பின்னர் நேற்று புதன்கிழமை போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளதாக, வீதி அதிகார சபையினர் தெரிவித்தனர். கடந்த இரு மாதகாலமாக தொடர்ந்து பெய்த அடை மழையைத் தொடர்ந்து ஹாலிஎல்ல உடுவர பிரதேசத்தில் பதுளை கொழும்பு வீதியில் மண்சரிவு மற்றும் வீதித் தாழிறக்கம் ஏற்பட்டதுடன், வீதிப் போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், வீதி அதிகார சபையினர் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் வீதியில் விழுந்து கிடந்த பாறைகள், மரங்கள் மற்றும் மண் மேட்டை இரவு, பகலாக அகற்றி இந்த வீதியூடான போக்குவரத்தை சீர்செய்துள்ளனர். இந்த சூழ்நிலையில் மாற்று வீதியை பயன்படுத்தி ஹாலிஎல்ல எட்டம்பிட்டிய வழியாக சுமார் 20 கிலோமீற்றர்வரை வாகனங்கள் சுற்றிச் சென்றதாகவும் இந்த வீதியூடான போக்குவரத்து சீர்செய்யப்பட்டதை அடுத்து வாகனங்கள் அனைத்தும் நேற்றையதினம் முதல் வழமைக்கு திரும்பியுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.






# இலங்கையின் முதற்தடவையாக காலநிலை மாற்றம் தொடர்பான பட்டப்படிப்பு ஆரம்பம்



இலங்கையின் முதற்தடவையாக காலநிலை மாற்றம் (Sri Lanka Climate Change) சம்பந்தமான பட்டப்படிப்பொன்றை கொழும்பில் உள்ள பீகாஸ் கெம்பஸ் (BCAS) அறிமுகம் செய்துள்ளது. மேற்படி பட்டத்தினை அறிமுகம் செய்து வைக்கும் ஊடகவியலாளர் மாநாடு பீகாஸ் கெம்பஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு இக் கல்விப் பீடத்தின் பணிப்பாளர் கிளயார் பிரகாஷ், பிகாஸ் கெம்பஸ் நிறைவேற்று அதிகாரி தெரேஸ் அமரதுங்க, முகாமைத்துவ பணிப்பாளர் தானியா பொலநோவிட்ட ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி பாட பட்டப் படிப்பு சம்பந்தமாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

உலகில் கால நிலை மாற்றம் தொடர்பான துறை பாரிய வருமானத்துடன் தொழில் வாய்ப்பை பெற்றுத் தரக் கூடியது. இலங்கையில் காலநிலை சம்பந்தமான பயிற்சிநெறிகள் போதிக்கப்படுவதில்லை.

ஆகவே தான் பீகாஸ் கெம்பஸ் இத்துறை சார்ந்த கம்பெனியுடன் இணைந்து இலங்கையில் உள்ள மாணவ மாணவிகளுக்கு பாடசாலை மட்டத்தில் இத்துறையை ஊக்குவித்து இப்பயிற்சி நெறி பயிற்றுவிக்க முன்வந்துள்ளது.

இத்துறை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கும். இப் பாடநெறியில் இணைந்து பயில விரும்புவர்கள் பீகாஸ் கெம்பஸ் ஊடாக அதனைப் பெற முடியும் என பணிப்பாளர் கிளயார் பிரகாஷ் தெரிவித்தார் .

**(அஷ்ரப் ஏ சமத்)**

# 25 வருட வளர்ச்சி மற்றும் வெற்றியைக் கொண்டாடும் சோப் அன்ட் அலைட் இன்டஸ்ட்ரீ

கொழும்பு மெஷினரி அன்ட் இக்விப்மன்ட்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முன்னணி நிறுவனமாக விளங்கும் சோப் அன்ட் அலைட் இன்டஸ்ட்ரீ (பிரைவட்) லிமிடட் நிறுவனம்(SAIL) இரசாயனம் மற்றும் மூலப்பொருள் சந்தையில் தொழில்துறை முன்னணியாளராக மாறுவது என்ற எளிமையான தொடக்கத்திலிருந்து தனது அசாதாரண பயணத்தை நினைவுகூறும் வகையில் 25 வருட நிறைவை பெருமையுடன் பூர்த்திசெய்துள்ளது.

25வருட வெற்றி முன்னிட்டு நேர்த்தியான கொண்டாட்டம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஓர் அற்புதமான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. SAIL நிறுவனத்தின் பயணத்தில் நெஸ்லே, ஹேமாஸ், யுனிலிவர், கொகாகோலா மற்றும் முன்னணியான பங்காளர்களான டெல்மேஜ், பசிலுர் டீ, ஐசிஎல் மார்க்கட்டிங், ரீஜே லங்கா உள்ளிட்ட மேலும் பலர் இணைந்திருந்தனர். இது வெறுமனே பாராட்டுக்களைத் தெரிவிக்கும் ஓர் இரவாக மாத்திரமன்றி, நிறுவனத்தின் பாதையில் ஒருங்கிணைந்திருந்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இதயபூர்வமான இசை நிறைந்த இரவாக அமைந்தது.




SAIL இன் முதுகெலும்பாக விளங்கும் ஊழியர்களுக்கு வெள்ளி நாணயங்கள் மற்றும் துபாய்க்கு சிறப்பு சுற்றுலாப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அர்ப்பணிப்பான குழு மீது நிறுவனம் கொண்டுள்ள அக்கறைக்கு சான்றாக இது அமைந்தது.

SAIL இன் புதிய சின்னம் வெளியிடப்பட்டது. இந்த சின்னமானது, நிறுவனத்தின் வரலாற்றின் அழகான பிரதிநிதித்துவம், கடந்த கால கொண்டாட்டங்கள் மட்டுமல்லாது, ஒரு புதுமையான எதிர்காலத்திற்கான நம்பிக்கையான படியையும் குறிக்கும் வகையில் அமைந்திருந்தது.

SAIL நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.ரிஸ்கி டீன் கருத்துத் தெரிவிக்கையில், “எமது எதிர்வினையாற்றல், மாற்றியமைக்கும் தன்மை மற்றும் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு சான்றாக SAIL இன் 25ஆவது ஆண்டு நிறைவு அமைந்துள்ளது.

எங்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். எமது புதிய சின்னமானது எங்கள் பயணத்தைப் பிரதிபலிப்பதுடன், ஒவ்வொரு முயற்சியிலும் இன்னும் பல ஆண்டுகள் சிறந்து விளங்குவதற்கான களத்தை அமைக்கிறது" என்றார்.



# அரச வருமானத்தை மேம்படுத்தும் முகமாக, VAT வரி அமுலாக்கலுக்கு மக்களின் ஆதரவு தேவை

பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பில் நாடெங்கிலும் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அரசியல் நோக்கம் கொண்ட கூற்றுக்கள், தவறாக வழிநடத்தும் ஊடக அறிக்கைகள் மற்றும் சந்தர்ப்பவாத வர்த்தகர்களால் பெரும் குழப்பநிலை எழுந்துள்ளது. பொருளாதார சவால்களுக்கு எதிராக நாடு போராடி வருகின்ற நிலையில், உறுதியான மற்றும் நிலைபேணத்தகு வளர்ச்சிக்கு ஈட்டப்படும் வருமானத்தை முடுக்கி விடுவது மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையும் அண்மைய பொருளாதார நெருக்கடிக்கு பகுதியளவில் ஒரு காரணமாக உள்ள நிலையில், இலங்கையில் வரி மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமானது வெறும் 7.3% ஆக காணப்படுகின்றமை உலகிலேயே மிகவும் குறைந்த விகிதங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டமானது 2026 ஆம் ஆண்டளவில் இந்த விகிதத்தை 14% என இரட்டிப்பாக்க முனைவதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி வருமானம் சுமார் 15% ஐ எட்டும் போது நாடுகள் பலவும் உயர் மட்ட வளர்ச்சிக்கு முகங்கொடுத்துள்ளமை இதற்கு சான்றாக உள்ளது.

2014 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கையில் வழக்கமான வற் வரி 15% இலிருந்து 18% ஆக அதிகரித்துள்ளதுடன், இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, பல்வேறுபட்ட சேவைகளுக்கு இது விதிக்கப்படுகின்றது. வற் வரித்தொகையை இறைவரித் திணைக்களத்திடம் செலுத்துவது என்பது பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் காணப்படுவதுடன், மாதாந்தம் அல்லது காலாண்டு அடிப்படையில் அவற்றைச் செலுத்துவதற்கும் இடமளிக்கின்றது.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் நிலைமையானது ஏனைய பல நாடுகளை விடவும் சிக்கலானது. வட்டி வீதங்களைக் குறைக்குமாறு ஜனாதிபதியும், மத்திய வங்கியின் ஆளுநரும் அனைத்து நிதி நிறுவனங்களையும் பல முறை கேட்டுக் கொண்ட போதிலும், அவை இன்னமும் கூடுதலாக காணப்படுவதுடன், இது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை பின்தள்ளுகின்றது. வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி தேவை என்பதை அது தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்களால் பின்பற்றப்பட்ட மோசமான நிதி முகாமைத்துவத்தின் விளைவாக இச்செலவுகள் காணப்படுவதுடன், நிதி நிறுவனங்கள் கைக்கொண்டுள்ள குறுகிய கால இலாப நோக்குடனான அண்மைய கொள்கைகளும் எமது தற்போதைய பொருளாதார சூழலுக்கு பொறுப்பாகும்.

# சென் அந்தனிஸ் ஹாட்வெயார் அறிமுகப்படுத்தும் HYDROMAX உயர் தர நீர்ப்பம்புகள்




1942 ஆம் ஆண்டு முதற்கொண்டு தனித்துவமான பாரம்பரியத்துடன், கட்டுமானத் துறையில் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள நாமமாகத் திகழ்ந்து வருகின்ற சென் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட், தனது உற்பத்தி வரிசையை விரிவுபடுத்தும் ஒரு மூலோபாய நகர்வாக,HYDROMAX என்ற நீர்ப்பம்பினை அறிமுகப்படுத்தவுள்ளது. கட்டுபடியான, உயர் தர மற்றும் நம்பகமான நீர்ப்பம்புக்களுக்கு சந்தையில் தற்போது காணப்படுகின்ற இடைவெளியைப் போக்கும் நோக்குடன் இப்புதிய அறிமுகம் இடம்பெறுகின்றது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு என பிரத்தியேகமாக உழைத்து வருகின்ற நிறுவனத்தின் அணி முன்னெடுத்த விரிவான ஆராய்ச்சியைத் தொடர்ந்து, தரமான நீர்ப்பம்புகளுக்கு பற்றாக்குறை நிலவுகின்றமை இனங்காணப்பட்டு, வலு, நம்பகத்தன்மை மற்றும் கட்டுப்படி ஆகியவற்றை இணைக்கும் ஒரு தீர்வை முன்கொண்டுவருவதற்கு அவர்களைத் தூண்டியது. HYDROMAX நீர்ப்பம்புகள் வலுவான மற்றும் இரைச்சலற்ற தூண்டு மோட்டார், 100% செப்பு முறுக்கு, அரிப்பை எதிர்க்கும் ஆற்றல் கொண்ட தூண்டி, கார்பன் மற்றும் செரமிக் வோட்டர் சீல் ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன், இவை அனைத்தும் அதிநவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்தை உபயோகித்து தயாரிக்கப்பட்டவை.

7,000 க்கும் மேற்பட்ட முகவர்கள் மற்றும் விநியோக கூட்டாளர்களைக் கொண்ட விசாலமானதொரு வலையமைப்புடன், HYDROMAX நீர்ப்பம்புகள் பரவலாக கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதற்கு சென் அந்தனிஸ் ஹாட்வெயார் தனது பலத்தை உபயோகிக்கும். 80 ஆண்டுகளுக்கும் மேலாக சந்தையில் நீண்டகாலம் நிலைபெற்றுள்ள நிறுவனம், தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு இலக்கணமான வர்த்தக நாமத்திற்காக நம்பிக்கைமிக்க வாடிக்கையாளர்கள் தளத்தைக் கட்டியெழுப்பியுள்ளது.

# GLF 2024 காலி இலக்கிய விழாவில் அதிகாரப்பூர்வ வங்கிக் பங்குதாரர் கொமர்ஷல் வங்கி




ஹார்பர்ஸ் பஜாரால் 'உலகின் நம்பர் 1 இலக்கிய விழா" என மதிப்பிடப்பட்ட காலி இலக்கிய விழாவிற்கு இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி தனது ஆதரவை அறிவித்துள்ளது.

பிரித்தானிய நாவலாசிரியர், ஊடகவியலாளர் மற்றும் ஒலிபரப்பாளர் செபஸ்டியன் ஃபாக்ஸ் மற்றும் இலங்கையில் பிறந்த பிரபல எழுத்தாளர் ரொமேஷ் குணசேகர ஆகியோரும் மற்றும் புக்கர் பரிசு வென்ற ஷெஹான் கருணாதிலக உள்ளிட்டோரும் கலந்துகொள்ளும் குறித்த இரண்டு பிரத்தியேக நிகழ்வுகளையும் இலங்கையின் முக்கிய தனியார் துறை வங்கி நடத்தவுள்ளது.

காலி இலக்கிய விழாவின் 2024 பதிப்பு, உலகளாவிய தொற்று நோய் காரணமாக ஒரு இடைவெளிக்குப் பிறகு, வரலாற்று சிறப்புமிக்க காலி கோட்டையில் ஜனவரி 25 முதல் 28 வரை நடைபெறவுள்ளது இந்த ஆண்டு விழா. தொடரின் 11ஆவது விழாவில், உலகம் முழுவதிலுமிருந்து 80 க்கும் மேற்பட்ட பேச்சாளர்களும், மேலும் 100 க்கும் மேற்பட்ட நிகழ்வுகளை உள்ளடக்கிய GLF 2019 இல் சுமார் 10,000 பேர் கலந்து கொண்டனர்.

'ஒரு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமான காலி இலக்கிய விழா நிகழ்விற்கு ஆதரவு வழங்குவது, இலங்கையின் கலை, கலாசாரத்தின் வளர்ச்சி மற்றும் சுற்றுலாத்துறையின் மீள் எழுச்சிக்கான எமது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது" என கொமர்ஷல் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் சில்லறை வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் ஹஸ்ரத் முனசிங்க கருத்து தெரிவித்தார்.

# 2,300 பேருக்கு இலவச மருத்துவ சேவைகளை வழங்கிய செலிங்கோ லை.ஃப் 2023






செலிங்கோ லைஃப் நிதியுதவியுடன் நீண்ட கால சமூக நல வேலைத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 2,300 இலங்கையர்கள் மருத்துவ ஆலோசனைகள், நோயறிதல் சேவைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையின் ஆயுள் காப்புறுதி சந்தையின் தலைராக விளங்கும் செலிங்கோ லைஃப்; கடந்த ஆண்டில் 10 'வைத்யஹமுவ ' (மருத்துவர் சந்திப்பு) மருத்துவ முகாம்களை நடத்தியது. மருத்துவர்கள் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்களை நோயறிதல் உபகரணங்களுடன் வெகு தொலைவில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு அழைத்துச் சென்று மக்களை பரிசோதிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. மற்றும் அவர்களின் மருத்துவ பிரச்சனைகளை மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், மொனராகலை, பொலன்னறு மற்றும் இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்களாக புதுக்குடியிருப்பு, வவுனியா, பஹலகுடாப்பட்டிய, அவுகான, பிபிலை, படல்கும்புர, திவுலங்கடவல, பண்டுவஸ்நுவர, மஹாபத்தனை மற்றும் ருவன்வெல்ல போன்ற நகரங்களும் இவ்வேளைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன.

பயனடைந்தவர்களில் பலர் உள்ளூர் விவசாய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் நெல் விவசாயிகள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியவர்கள். அவர்களில் பெரும்பாலோர் நோயறிதல் மற்றும் தடுப்பு சுகாதார பராமரிப்புக்கான குறைந்த அணுகலைக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வைத்தியஹமுவ முகாமிலும் பங்கேற்றவர்களுக்கு சீரற்ற அல்லது உணவருந்தா இரத்த சர்க்கரை பரிசோதனைகள், ஈசிஜி, சீரம் கொழுப்பு சோதனைகள், நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான சிறுநீர் பரிசோதனைகள் என்பவற்றோடு அவர்களின் இரத்த அழுத்தத்தை பரிசோதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும், அவர்களின் உடல் நிறை குறியீட்டெண் மற்றும் கண் பார்வையும் பரிசோதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



35 மற்றும் 610 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் ஓவியத் திறனை வெளிப்படுத்தும் வகையில், அவர்களிடையே படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில், ஜனசக்தி லைஃப் மேற்கொண்ட முயற்சியான சமீபத்தில் முடிவடைந்த ‘சுதந்திர சிந்தனைகள்’ ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சி, மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த நிகழ்வானது நாடு முழுவதிலும் இருந்து 10,000 விண்ணப்பங்களைப் பெற்றிருந்தது. சேகரிக்கப்பட்ட ஓவியப் படைப்புகளின் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு BMICH இல் இடம்பெற்றது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் சிறந்த 100 கலைப் படைப்புகள் தேர்வுசெய்யப்பட்டு BMICH கண்காட்சிக் கூடத்தின் பிரதான அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டன.

# 2.4 மெகாவோட்ஸ் சூரிய சக்தி மின் திட்டத்தை ஆரம்பித்துள்ள சியெட் நிறுவனம்

இலங்கையின் முன்னணி டயர் உற்பத்தியாளர்களான சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் 475.97 மில்லியன் ரூபா முதலீட்டில் கூரையில் நிறுவப்படும் அதி அழுத்த அளவைக் கொண்ட சூரிய சக்தி மின் திட்டத்தை நிறுவி உள்ளது. களனி வளாகத்தில் உள்ள அதன் உற்பத்திப் பிரிவில் காபன் படிமங்களைக் குறைக்கும் வகையில் இந்த முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த 2.4 மெகாவோட்ஸ் சூரிய சக்தி மின் திட்டத்தை ரீஜென் ரினூவபல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் தொழில்சாலையின் கூரையில் நிறுவி உள்ளது. இது செயற்படும் காலத்தில் 59.61 கெகாவோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். தேசிய மின் விநியோகத்தின் மூலம் சியெட் பெற்றுக் கொள்ளும் மின்சாரத்தில் 21 வீதத்துக்கு ஈடாக இது அமையும். 42,326 தொன் $CO_2$ வெளியேற்றத்தை இது தவிர்க்கும் என கம்பனி தெரிவித்துள்ளது.

295,200 சதுர அடி கொண்ட இந்த சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டம் 2023 டிசம்பரில் செயற்படும் நிலைக்கு வந்துள்ளது. இது கம்பனியின் மின்சாரக் கட்டணப் பட்டியல் தொகையையும் கணிசமாகக் குறைக்கும். தற்போது கம்பனியின் மொத்த உற்பத்திச் செலவில் 13 வீதம் மின்சாரக் கட்டணச் செலவாகும்.



சூரிய சக்தி திட்டத்துக்கான செலவு, இன்வேட்டர்களுக்கான செலவு, அதற்கான பாதைகள், சுத்திகரிப்பு செலவுகள், இலங்கை மின்சார சபையின் இணைப்புச் செலவு என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த முதலீடு அமைந்துள்ளது.

“இலங்கையின் வாயுமூலமான டயர் தேவையில் சுமார் அரைவாசியை உற்பத்தி செய்யும் சியெட் களனி நிறுவனம், தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் மிகவும் முக்கியமான ஒரு நிறுவனமாகும். எமது அர்ப்பணமானது சமூகத்துக்கும் சுற்றாடலுக்கும் மிக ஆழமான நன்மைகளை உள்ளடக்கியதாகும்” என்று கூறினார் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி. “இது ஒரு மீள் சக்தி முதலீடாகும். நிலைத்தன்மையில் நாம் செலுத்தி வரும் கவனத்துக்கு இது ஓர் உதாரணமாகும்” என்று அவர் மேலும் கூறினார்.



# கண்டி மண்ணுக்கு மறக்க முடியாத சமூகப்பணிகளை ஆற்றிய பெருந்தகை அமரர் அ. துரைசாமிப்பிள்ளை

## மத்திய மாகாண இந்து மாமன்ற ஸ்தாபகத் தலைவரின் மறைவினால் அன்னாரின் அபிமானிகள் துயரம்

## தேசமானிய எஸ்.பரமேஸ்வரனுடன் சந்திப்பு

**மத்திய மாகாண இந்து மாமன்ற ஸ்தாபகத் தலைவர் அமரர் அ. துரைசாமிப்பிள்ளை கண்டி மண்ணுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூகப் பணிகளை ஆற்றிய பெரும் மகான். அவர் குறித்து மலையக கலாசார சங்கத்தின் தலைவரும் சமூகச் செயற்பாட்டாருமான தேசமானிய எஸ். பரமேஸ்வரன் தினகரன் பத்திரிகைக்கு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.**

அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர் அ. துரைசாமிப்பிள்ளை அவர்கள் வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து தன் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்த ஒருவர். அவர் வர்த்தகத் துறையில் வேகமாக முன்னேறி சமய கலாசாரப் பண்பாட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடுகளுடன் செயற்பட்டவர்.

வர்த்தக நிலையத்தை ஆரம்பித்த அவருக்கு மக்கட் செல்வமும் பொருட் செல்வமும் நிறையவே கிடைத்தன. செய்வதை சிறப்பாகச் செய்வதிலே அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. அவர் தொட்டதெல்லாம் துலங்கியது.

1964 ஆம் ஆண்டளவில் அவர் பொதுப் பணியில் காலடி வைத்தார். சிறுது காலம் தடைப்பட்டுப் போயிருந்த கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய தேர்த் திருவிழாவை தொடர்ந்தும் நடத்தும் திருப்பணியுடன் அவரது சமயப் பணிகள் ஆரம்பமாகின. அவருக்கு உறுதுணையாய் அமைந்தார் அமரர் க. செல்வமுத்து அவர்கள் . அவ்வாண்டுதான் தேர்த்திரு விழா சபை அமைக்கப்பட்டது. திருவிழாவைத்து தொடர்ந்து சபையின் தலைவராகத் திகழ்ந்த துரைசாமிப்பிள்ளை தனது சபை தேர்த்திரு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதோடு திருப்தி அடைந்து விடக் கூடாது என எண்ணினார்.

மலையக மாணவ மன்னன் எனப் போற்றப்படும் பெரியார் ராஜன் அவர்களுடைய நட்பு அவரது சமூகப் பார்வையை விசாலமாக்கியது. தேர்த்திருவிழா சபை அங்கத்தவர்களை ஸ்தாபக அங்கத்தவர்களாகக் கொண்டு தனக்கான அங்கீகரிக்கப்பட்ட சட்டதிட்டங்களுடன் 1970 இல் மத்திய மாகாண இந்துமாமன்றம் உருவாகியது.

மன்றத்தின் முதற்பணியாக இந்து மாணவர்களுக்கு சமய உணர்வை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி விழாவை மன்றம் நடத்தத் தொடங்கியது. பெரும் ஆர்வத்துடன் மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டனர். மன்றத்தின் செயற்பாடுகள் உறுதுணையாய் அமைவதற்கு, 1976 இல் கண்டி இந்து வாலிபர் சங்கத்தின் போஷகராக அமரர் துரைசாமிப்பிள்ளை திகழ்ந்தார். அவரின் தலைமையில் கண்டி இந்துப் பிரமுகர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளுக்கென தனியான கட்டடத்தின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டனர். அந்த உன்னத முயற்சியின் விளைவே 1983 ஜூன் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இந்து கலாசார நிலையம். அனைத்துப் பணிகளிலும் துரைசாமிப்பிள்ளை உன்னதமான தலைமைத்துவப் பண்புகளுடன் முன்னணியில் இருந்து செயற்பட்டார்.

இந்தக் கலாசார நிலையத்தை கேந்திர நிலையமாகக் கொண்டு மன்றப் பணிகளை விரிவாக்கினார். பரத நாட்டியம், கதகளி, கர்நாடக சங்கீதம், பண்ணிசை, மிருதங்கம், வீணை, கண்டிய நடனங்கள் ஆகிய வகுப்புக்களில் இன்று ஆயிரக்கணக்கான மாணவர் கற்று வெளியேறியிருக்கின்றார்கள். இன்னும் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு தரமான நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக நிலையத்தின் 'வெள்ளி விழா' மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டது.

மற்றவர்களின் திறமைகளை மதித்து போற்றுவதில் துரைசாமிக்கு நிகர் அவரேதான். மற்றவர்களின் கருத்துக்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து நுணுக்கமாக அலசி ஆராய்ந்து தனக்கு சரியெனப்பட்டால் தான் ஏற்றுக் கொள்வார். இல்லையேல் அது உங்கள் கருத்து 'என் கருத்து மாறுபட்டது' என்று புன்னகையோடு கூறி முற்றுப்புள்ளி வைத்து விடுவார்.

அசாத்தியதுணிவு மிக்க தலைவராக துரைசாமிப்பிள்ளை திகழ்ந்தார். துணிந்து இறங்கி விட்டால் எதிலும் எச்சந்தர்ப்பத்திலும் முன்வைத்த காலை பின்வைக்கவே மாட்டார்.

கண்டி நகரில் வர்த்தகத் துறையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி ஜாம்பவனாகத் திகழ்ந்த அவர் மத்திய மாகாண இந்து மாமன்றத்தை உன்னதமான ஸ்தாபனமாக கட்டியெழுப்பினார். இந்து கலாசார நிலையம் போன்ற அதன் அங்கங்களையும் மிளிர வைத்தார். இந்து கலாசார நிலையம் என்றென்றும் நிலைத்து நின்று இந்துக்களின் பெருமையை எடுத்து இயம்பப்படுவது போல் அமரர் துரைசாமிப்பிள்ளையின் பேரும் புகழும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

மாணவரது முன்னேற்றத்திற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகவும் போற்றத்தக்கவை. குறிப்பாக சிவராத்திரிவிழா, நவராத்திரி விழா, நுண்கலைத் தமிழ் வகுப்புக்கள் நடத்தியமை மற்றும் வாசிகசாலை அமைத்தமை போன்றவை குறிப்பிடத்தக்கவை. உயர் கல்வியை தொடர முடியாது நிதி நெருக்கடியில் சிக்கிய மலையக தமிழ் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்து மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்றி, அவர் தம் மனங்களில் தீபச் சுடராய் இன்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றார்.

இவரது பணி தமிழ் சமுதாயத்திற்கு மட்டுமன்றி சகோதர இனத்தவருக்கும் கிடைத்தது. இனமத பேதம் கடந்து போற்றத்துகு சேவைகளைச் செய்த மாமனிதராய் திகழ்ந்தும் கொண்டிருக்கிறார்.

அவரிடம் பயின்றவர்களில் ஏராளமானோர் இன்று நம் நாட்டில் தொழில் மேதைகளாக பிரகாசிக்கின்றார்கள்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்ற பாவேந்தரின் கூற்றுக்கமைய உன்னதமான ஒரு குடும்பத் தலைவராகவும் அவர் விளங்கினார். மலையக வரலாற்றின் ஓர் ஏடாக நிலைத்து விட்ட அமரர் அ. துரைசாமிப்பிள்ளையின் தலைமைப் பொறுப்பை இன்று ஏற்றிருக்கும் அவரது இரண்டாவது புத்திரான சிவசுப்பிரமணியம் அவர்கள் அமரர் காட்டிய வழியில் நின்று சிறந்த முறையில் பணிகளை முன்னெடுத்து செல்கின்ற ஒருவராய் விளங்குகிறார்.

1923 ஆம் ஆண்டில் பிறந்த துரைசாமிப்பிள்ளை. சிறு வயதிலேயே வேலைகளைச் செய்ய ஆரம்பித்துள்ளார். அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய எஸ். பி.கே என்ற ஜவுளிக் கடையில் வேலைக்கமர்ந்து மிகவும் சுறுசுறுப்பானவர் என்று பாராட்டைப் பெற்றவர். அதன் பின்னர் 1948 இல் அவரும் மற்றும் சிலரும் சேர்ந்து சரஸ்வதி ஸ்டோர்ஸை ஆரம்பித்தார். 14 கடை ஊழியர்களோடு இரவு பகல் பாராது அயராது உழைத்தார். கண்டி மாநகரின் தலைசிறந்த நிறுவனமாக அது வளர்ந்து விட்டது. கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு தொழில் புரிந்தமையால் நாணயம் நேர்மை அறிந்து கொழும்பு, காஞ்சிபுரம், பாம்பே, கல்கத்தா,பாகிஸ்தான் வர்த்தகர்களுடன் தொடர்புகளைப் பேணி நேர்மையான முறையில் திறமையுடன் வர்த்தகத்தை நடத்தினார். அவருடைய இடைவிடாத உழைப்பின் மூலம் பின்னோயா தோட்டம்,, ரத்ன மாளிகை போன்றவற்றின் பங்காளரானார். இன்று கண்டியில் பளையகாட்ஸ் பிரபல கட்டடத் தொகுதியாக விளங்கும் சிவாஜி எம்போரியம் என்பன அவருடைய ஏனைய சாதனைகளாகும்.



இவ்வாறு தடைகளை உடைத்தெறிந்து சாதனைக்கு மேல் சாதனை படைத்த துரைசாமிப்பிள்ளையின் சாதனைகளில் ஒன்று கண்டி இந்து மாமன்றம் என்று சொல்ல வேண்டும்.

அவர் தொழில் ஆரம்பித்த காலத்தில் அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை விதித்ததால் புடைவைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தாமல் மிகவும் நியாயமான முறையில் பொருட்களை விற்பனை செய்தார். மக்கள் சாரிசாரியாக கடைக்குள் வர ஆரம்பித்தனர். கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஒரு கதவினை மட்டும் திறந்து வியாபாரம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவர் இந்தியாவிலுள்ள நாராயணசாமிப்பிள்ளையின் மூத்த மகள் செல்லம்மாளைக் கரம் பிடித்து கண்டி புனித திரித்துவக் கல்லூரிக்கு முன்னால் மூன்று மாடி வீட்டை வாடகைக்கு எடுத்து இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சிகரமான நடத்தி வந்தார். தம் அன்பு மனையாளுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தியவர். பாசமிகு தந்தையாக பதினொரு பிள்ளைகளை அரவணைத்து வளர்த்த அன்பானவர் அவர்.

மாம்பழமோ, வாழைப்பழமோ எதுவாக இருந்தாலும் கொஞ்சமாக வாங்கும் பழக்கம் அவரிடமில்லை. கூடை கூடையாகத்தான் வாங்குவார். அடுத்தவர்களுக்கு கொடுத்து உண்டு மகிழ்கின்ற உள்ளன்பு கொண்டவர். நல்ல விருந்தோம்பல் பண்புகளைக் கொண்டவர். 1983 ஜுலைக் கலவரத்தில் அவரும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவரால் இயன்ற உதவிகளைச் செய்தார். தான் இடர்களை எதிர்நோக்கிய போதிலும் இடருற்ற பிறருக்கு உதவும் மனோபாவமும் பரோபகார சிந்தையும் அவரிடம் நிறையவே உள்ளன.

தங்கள் பிள்ளைகளுக்கு ஆங்கில கல்வி புகட்ட வேண்டும் என்று கனவு கண்ட அவர் புத்திரர்களை கண்டி புனித திரித்துவக் கல்லூரியிலும் புத்திரிகளை பெண்கள் உயர்தர கல்லூரிகளிலும் பயில வைத்து தனது கனவை நனவாக்கிக் கொண்டார்.

அவர் இன மதம் பிரதேசம் என்று பாராமல் எத்தனையோ மனிதாபிமான உதவிகளைச் செய்த சம்பவங்கள் இருந்தாலும் அவர் ஒரு சம்பத்தை மட்டும் வெளியே நினைவு கூருபவராக இருந்தார். கண்டியில் இருந்து குருநாகல் போகும் வழியில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து ஒரு மூதாட்டி பெட்டியில் 25,30 கிலோ நல்லமுத்து சம்பா கல்நீக்கிய நாட்டுக்குத்து அரசி கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் அந்தக் மூதாட்டி தனது 7,9 வயது நிரம்பிய பேரப்பிள்ளைகள் கண்டி நகரில் வைத்து படிப்பிக்குமாறு வேண்டினார். ஏற்படும் செலவுகளுக்கு அரசி தந்து கழித்து விடுவதாகவும் கூறினார்.

அதற்கு இணங்க அவர் தாராள மனதுடன் பெண் பிள்ளையினை புஸ்பதான பெண்கள் கல்லூரியிலும் ஆண் பிள்ளையினை கண்டி சில்வெஸ்டர் கல்லூரியிலும் சேர்த்தனர். அவர்கள் படித்துப் பட்டம் பெற்றார்கள். அப்பொழுது ஆண்பிள்ளை குருநாகல் போதனா வைத்தியசாலையில் வைத்தியராகவும், பெண் குளியாப்பிட்டிய நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகவும் கடமையாற்றுவதை நினைத்து பூரிப்படைகின்றேன் என்று கூறி அகமகிழ்வார். அந்த வகையில்தான் நூற்றுக்கணக்கான வறிய மலையக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க முன்வந்தமை என்பது ஆச்சரியமான விடயமல்ல.

இவர் பழகுவதற்கு மிக இனியவராகவும் அனுபவத்தில் சிறந்தவராகவும் இருந்தார். வாடிக்கையாளர் முதல் அனைவரோடும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பாசமாகவும் நேசமாகவும் வாழ்ந்ததுடன் நீதியாகவும் நேர்மையாகவும் நாணயமாகவும், கடன்படாமல் வியாபாரம் செய்து கடும் முயற்சியாலும் உழைப்பாலும் உயர்ந்தவர். அவரது வாழ்க்கை எல்லோருக்கும் உதாரணமாகும்.

இத்தகைய பெருந்தகை 2003 டிசம்பர் முதலாம் திகதி மரணம் எய்தினார். அவருடைய உயிரிழப்பு கண்டி மண்ணுக்கு பெரும் பேரிழப்பாகும். அவர் குறித்து முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் குறிப்பிடும் போது ' மத்திய மாகாண இந்து மாமன்றம் இலங்கையின் பிரசித்தி பெற்ற அமைப்புக்களில் ஒன்றாக விளங்குகிறது.

பல இன மக்கள் வாழும் கண்டி மாநகரில் பல வசதிகளைக் கொண்ட இந்து மாமன்ற கட்டடம் அனைத்து இந்து மக்களும் பெருமை கொள்ளக் கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இந்து மக்களின் நலனுக்காக செயற்பட்டாலும் பல இனமக்களோடும் நல்லுறவை வளர்த்து எல்லோருடனும் பண்புடன் பழகி மிகச் சிறந்த முன்னுதாரணமாக மத்திய மாகாண இந்து மாமன்றம் செயற்பட்டு வருகிறது.

இந்து மாமன்றத்தின் ஆரம்பகர்த்தா பல்வேறு இடையூறுகளுக்கிடையே தனக்கேரிய சாதுரியத்துடன் செயற்பட்டார். மலையக மக்களுடைய பல சாதனைகள் உள்ளன. இச்சாதனையாளர்கள் பட்டியலிடப்பட்டால் துரைசாமிப்பிள்ளை அப்பட்டியலில் முதலிடம் வகிப்பவருள் ஒருவராகக் கணிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை என்று தெரிவித்துள்ளார். நல்ல சமூக செயற்பாட்டாளர்களை மக்கள் தங்களில் தோள்களில் சுமப்பார்கள் என்பதுதான் உண்மை. அந்த வகையில் அமரர் ஆ. துரைசாமிப்பிள்ளை எங்கள் தோள்களிலும் மனதிலும் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்.

**ஜீவராஜ்**













## தீவகத்தில்

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேலுமொரு பொலிஸ் நிலையம் அவசியம்

### யாழ். அரசாங்க அதிபர்

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

தீவகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேலுமொரு பொலிஸ் நிலையத்தை அமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

கைதடியில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற தேசிய நல்லிணக்கத்துக்கான கலந்துரையாடலின் போது, வேலணையில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இந்நிலையிலேயே, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"யாழ்ப்பாண மாவட்டத்தின் பல இடங்களிலும் கால்நடைகள் திருட்டு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. யாழ். மாவட்டத்தில் தீவு முழுவதற்கும் ஊர்காவற்றுறையில் ஒரு பொலிஸ் நிலையம் மாத்திரமே உள்ளதுடன், அந்தப் பொலிஸ் நிலையமே மண்டைதீவு வரை முகாமை செய்கின்றது.

தீவகத்தில் பொலிஸ் பலம் போதாமல் இருப்பதே சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிக்க காரணமென்பதுடன், இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது.

இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20ஆம் திகதி இணைத் தலைவர் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

ஆகவே, தீவகத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேலணை அல்லது அல்லைப்பிட்டியில் மேலுமொரு பொலிஸ் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது" எனத் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# யாழ். பல்கலையில் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு 'இலங்கையில் தொடரும் நெருக்கீடுகளிடையே தப்பிப்பிழைத்தலும் எதிர்ப்பும்' எனும் கருப்பொருளில் கைலாசபதி கலை அரங்கில் இன்று வியாழக்கிழமை (18) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மாநாட்டின் அழைப்பாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எல். ரமணன் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்கிறார்.

யாழ். பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடக்க நிகழ்வுகளில் ஒன்றாகவும் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டு தொடரின் ஓர் அம்சமாகவும் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நடைபெறுவதுடன், மாணவர்கள் தமது இறுதி வருட ஆய்வு செயற்பாட்டின் பேறாண ஆய்வேடுகளை அடிப்படையாக கொண்டு தயாரித்த ஆய்வுக்கட்டுரைகளை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக இம்மாநாடு அமைந்துள்ளது.

மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இம்மாநாட்டில் கலைப்பீடத்தின் சமூக, விஞ்ஞானம் மற்றும் மனிதாயக் கற்கைகள் சார்ந்த 136 ஆய்வுக் கட்டுரைகளை பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்கள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஆய்வுக்கட்டுரை அமர்வு இரண்டு தொகுதிகளாக 17 விடயதானங்களினூடாக முற்பகல் 11.00 மணிக்கும் மதியம் 1.00 மணிக்கும் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபங்களில் நடைபெறும். இம்மாநாட்டில் தலைமையாளராக பேராசிரியர் சி.ரகுராம், கலைப்பீடாதிபதி மற்றும் சிறப்புரையாளராக இரேனியஸ் செல்வின், ஓய்வுநிலை இலங்கை நிர்வாகசேவை சிரேஷ்ட அதிகாரி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

## ஜெயபுரம் பிரதேசத்தில்

# வடமாகாண தேசிய தைப்பொங்கல் விழா

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண தேசிய தைப்பொங்கல் விழா பூநகரியின் ஜெயபுரம் அம்மன் ஆலயத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

தமிழர் மரபுகளுக்கமையவும் கலாசார முறைப்படியும் ஜெயபுரம் வயலில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் அதனை சூரியபகவானுக்கு அர்ப்பணிக்கும் பொங்கல் பொங்கும் விழா ஜெயபுரம் அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

இதன் பின்னர் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன், ஆளுநர் உட்பட அழைக்கப்பட்ட அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.





# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் ஜன. 24 இல்

**(யாழ். விசேட நிருபர் )**

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை (24) நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா கிரியைகள் நேற்று புதன்கிழமை (17) ஆரம்பமாகியதுடன், தொடர்ந்து வரும் நாட்களில் கிரியைகள் நடைபெற்று, எதிர்வரும் திங்கட்கிழமை (22) காலை 7.00 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை (23) மாலை 5.00 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறவுள்ளதாக, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



இதனை தொடர்ந்து எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9.38 மணி முதல் முற்பகல் 11.20 மணிவரையான சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# அச்சுவேலி வைத்தியசாலையில் பராமரிப்பு நிலையம் திறப்பு



**(யாழ். விசேட நிருபர் )**

யாழ்ப்பாணம், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சை நிலையமொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16) திறந்து வைக்கப்பட்டது.

நீண்டகாலமாக கர்ப்பிணிகளுக்கும் சிறுவர்களுக்கும் சிகிச்சை வழங்குவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்த அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு பத்தமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழுமையான நிதி உதவியில் 17 இலட்சம் ரூபா பெறுமதியில் இதற்கான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நலன்புரிச் சங்க செயலாளர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்த நிலையத்தை ஆறுமுகம் சிவானந்தன் குடும்பத்தினர் மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பணிப்பாளரும் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த நிலையமானது சிறுவர்கள் மற்றும் சிறுவர்களை பராமரிப்பதற்கு ஏதுவாக சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்ட செயலக

# சூரியப் பொங்கல் விழாவும் உழவர் கௌரவிப்பு நிகழ்வும்





**(மன்னார் குறூப் நிருபர் )**

மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த சூரியப் பொங்கல் விழாவும் உழவர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று புதன்கிழமை (17) காலை 9.30 மணியளவில் அம் மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இதற்கான நிகழ்வுகள் நடைபெற்றன. நடனம், சிறப்பு பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றன.

இதன் பின்னர் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட உழவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், மேலதிக மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தனங்கிளப்பில் இளம் குடும்ப பெண்ணின் சடலம் மீட்பு



**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பிரதேசத்திலுள்ள கிணறொன்றிலிருந்து இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

33 வயதுடைய குடும்பப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார்.

திருமணமாகி நுணாவில் பிரதேசத்தில் வசித்து வரும் மேற்படி பெண், சம்பவ தினத்தன்று தனது குழந்தையுடன் தனங்கிளப்பிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று குழந்தையை ஒப்படைத்து விட்டு, சைக்கிளில் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் இவரைக் காணாத நிலையில் உறவினர்கள் தேடியுள்ளனர். இதன்போது தனங்கிளப்பிலுள்ள கிணறொன்றுக்கு அருகில் இவர் பயணித்த சைக்கிள் காணப்பட்டதுடன், இவரும் கிணற்றில் சடலமாக காணப்பட்டதை உறவினர்கள் அவதானித்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



யாழ்ப்பாணம், தென்மராட்சி கைதடி சிறுவர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டதன் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு அப்பூங்காவில் கடந்த திங்கட்கிழமை (15) நடைபெற்றது. இந்த பூர்த்தி நிறைவையொட்டி சிறுவர்கள் கேக் வெட்டி நிகழ்வை ஆரம்பித்ததுடன், சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. கடந்த 15/01/2023 அன்று கைதடி சிறுவர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சாவகச்சேரி விசேட நிருபர்)

# கொடிகாமத்தில் விபத்து; இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், கொடிகாமம் நகரில் ஏ09 வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.




ஹன்டர் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே விபத்தில் படுகாயமடைந்துள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தாழ்வுப்பாட்டில்

# போதை மாத்திரைகளுடன் குடும்பஸ்தர் கைது

**(மன்னார் குறூப் நிருபர்)**

மன்னாரின் தாழ்வுப்பாடு பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து ஒருதொகை போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16) மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி வீட்டில் சந்தேகத்துக்கிடமான முறையில் சிலர் தங்கியுள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அவ்வீட்டில் சோதனை நடத்தியதாகவும் இதன்போது 520 போதை மாத்திரைகளை கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



அத்துடன், சந்தேக நபரான குடும்பஸ்தர் ஒருவரையே கைது செய்துள்ளதாகவும், இச்சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இந்தியாவிலிருந்து கடல் வழியாக இப்போதை மாத்திரைகள் கொண்டு வரப்பட்டமை தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐந்நூறு ஆண்டுகளாக நீடித்த மோதலுக்கு அமைதியான முறையில் எட்டப்பட்ட தீர்வு



குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

அயோத்தியில் இராமர் கோயில் கும்பாபிஷேகத்துக்காக நாடு தயாராகி வருகிறது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட கனவு நனவாகி உள்ளது. உச்சநீதிமன்றம், பிரதமர் மோடி மற்றும் அனைத்து தொடர்புள்ளவர்களும் அதை நிறைவேற்றுவதில் ஆற்றிய பங்கை பாராட்ட வேண்டிய நேரம் இது. அயோத்தியில் உள்ள இராமர் கோயிலைச் சுற்றியுள்ள கதை சுவாரசியமானதும், மர்மங்கள் நிறைந்ததும் ஆகும்.

கடந்த 2002 ஆம் ஆண்டு கோடை காலத்தில் அப்போதைய விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், பெங்களூர் ஆசிரமத்துக்கு என்னை சந்திக்க வந்திருந்தார்.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், இராமர் கோயில் கட்டுவதற்கான வழியை உடனடியாகத் தீர்மானிக்க வேண்டும் என்று அசோக் விரும்பினார். இதுவே அவரது ஒரு முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருந்தது. வாஜ்பாய் ஒரு கூட்டணி அரசாங்கத்தை நடத்தி வந்த அந்த சூழலில் அவரது சில கோரிக்கைகள் நடைமுறைக்கு மாறானதாகத் தோன்றின.

கடந்த 2001 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்ற நிகழ்ச்சியில் (WEF) கலந்து கொண்டு நான் இந்தியாவுக்குத் திரும்பியதில் இருந்து நானும் வாஜ்பாயும் அயோத்தி பிரச்சினை சம்பந்தமாகத் தொடர்பில் இருந்தோம். நீண்ட காலமாக நிலவி வந்த அந்த சர்ச்சைக்கு அமைதியான மற்றும் சுமுகமான தீர்வு காணும் பணியை அவர் என்னிடம் ஒப்படைத்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக, முஸ்லிம் தலைவர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க உறுப்பினர்களுடன் தொடர் கலந்துரையாடலில் நான் ஈடுபட்டேன்.

மறுநாள் காலை தியானத்தின் போது, பாழடைந்த தேவி கோயில் மற்றும் பராமரிப்பு தேவைப்படும் ஓர் குளம் எனக்குத் தெரிந்தது. அந்த நேரத்தில் நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சில நாட்களுக்குப் பிறகு, தமிழ்நாட்டில் இருந்து ஒரு வயதான நாடி சித்தர் ஆசிரமத்திற்கு வந்து என்னைச் சந்திக்க விரும்பினார். அவர் பழங்கால பனை ஓலைகளைப் படிக்கும் போது, "குருதேவ், ராம ஜென்ம பூமி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு சமூகங்களையும் ஒன்று சேர்ப்பதில் நீங்கள்ஒரு பங்கு வகிப்பீர்கள் என்று நாடியில் எழுதப்பட்டுள்ளது" என்று ஒரு மென்மையான அதிகாரத்துடன் கூறினார்.

தேவகாளி கோயில் இடிந்த நிலையில் இருந்தது. அதன் மத்தியிலுள்ள குளம் ஒரு குப்பை கொட்டும் இடமாக காணப்பட்டது. டெல்லி மற்றும் லக்னோவில் உள்ள எங்கள் தன்னார்வலர்களிடம் கோயிலை புதுப்பித்தல் மற்றும் குளத்தை புதுப்பிக்கும் பணியை தொடங்குமாறு கேட்டுக் கொண்டேன். செப்டம்பர் மாதம் மத்தியில், அவர்கள் அந்தப் பணியை வெற்றிகரமாக முடித்தனர்.

செப்டம்பர் 18ம் தேதி ஒரு குழுவினருடன் அயோத்தியைச் சென்றடைந்தேன். ஹனுமான் கர்ஹி, ஸ்ரீ ராம் ஜன்மஸ்தான் மற்றும் பிற புனிதத் தலங்களுக்குச் சென்ற போது, நகரத்தின்குறுகிய பாதைகள் மற்றும் குப்பைகள் நிறைந்த பாதைகள் புறக்கணிப்பின் அப்பட்டமான நிலையை எடுத்துக் காட்டின. மக்களிடையே ஓர் அச்ச உணர்வு நிலவி இருந்தது. நான் சென்ற இடமெல்லாம், இந்த நீண்ட கால மோதலால் எத்தனை சாதுக்கள் மற்றும் துறவிகள் உயிரிழந்தனர் என்பதைப் பற்றி மக்கள் சோகமான கதைகளைக் கூறினர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் திகதி காலை தேவகாளி கோயிலின் மறுகும்பாபிஷேகம் நடைபெற்றது. எங்கள் ஆசிரமத்தைச் சேர்ந்த பண்டிதர்கள் குழுவினர் என் முன்னிலையில் அதனை நடத்தினார்கள். நான் புனித அக்னியில் பூர்ணாஹுதியை அர்ப்பணித்த போது, இந்தக் கோயிலின் வயதான பூசாரியின் கண்களில் மகிழ்ச்சி மற்றும் நன்றியினால் கண்ணீர் வழிவதைக் கண்டேன்.

அன்று மாலை, தேவகாளி கோயில் வளாகத்தில் ஒரு சத் சங்கம் நடைபெற்றது. அதற்கு நாங்கள் இந்து மற்றும் சூஃபி துறவிகளை அழைத்தோம். சத் சங்கத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண அனைவரும் கூட்டாக பிரார்த்தனை செய்தோம். நான் முஸ்லிம் தலைவர்களை கௌரவிக்கும் போது, அவர்கள் எனக்கு துளசி இராமாயண புத்தகத்துடன் குர் ஆன் நூலையும் தந்தனர். மேலும் ஸ்ரீராமர் மீது தங்கள் ஆழ்ந்த பயபக்தியைப் பற்றியும் பேசினர். அவர்களின் உடல்மொழியில் சகோதரத்துவ உணர்வு இருந்தது. சுயநலம் மிகுந்தவர்கள் மட்டுமே சமூகங்கள் பிளவுபடுவதை விரும்புபவர்கள் என்ற எனது நம்பிக்கையை இது வலுப்படுத்தியது.

வருடங்கள் கடந்தன. 2017 ஆம் ஆண்டு, இரு சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களாலும், பின்னர் உச்சநீதிமன்றத்தாலும் தூண்டப்பட்டு, ராமஜென்ம பூமி விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கான எனது முயற்சிகளை மீண்டும் தொடங்கினேன். இறுதியில், உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது, அந்த நிலத்தை கோயில் கட்டுவதற்கும், 5 ஏக்கர் மசூதி கட்டுவதற்கும் ஒதுக்கியது. 500 ஆண்டுகளாக நிகழ்ந்து வந்த மோதல் அமைதியான தீர்வை எட்டிய ஒரு முக்கியமான சந்தர்ப்பம் அதுவாகும்.


**2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் 11(5)ம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் 11(5)ம் பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தல் மூலம், 2024, ஜனவரி 17 திகதியிடப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைச் சுற்றறிக்கை இல 04-01-2024 இன்படி, நெஸ்லே லங்கா பி எல் சி, நிரற்படுத்தப்பட்ட கம்பனியாக 2024, ஜனவரி 17 அன்று முதல் இல்லாதொழியுமிடத்து, நெஸ்லே லங்கா பி எல் சி எனும் கம்பெனியின் பெயர், மேற்படி கம்பனிகள் சட்டத்தின் 11(4) ம் பிரிவின் பிரகாரம் 2024, ஜனவரி 17 அன்று முதல் முதற்கொண்டு நெஸ்லே லங்கா லிமிடெட் என தீர்க்கப்பட்டதாகக் கருதப்படுகிறது என்பதை இத்தால் அறியப் படுத்துகின்றோம்.

கம்பெனியின் முன்னைய பெயர் - நெஸ்லே லங்கா பி எல் சி

கம்பெனியின் பதிவிலக்கம் - பி கியூ 20

கம்பெனியின் பதிவு விலாசம் - இல. 440, டீ. பி. ஜயா மாவத்தை (டாலி ரோட் ) கொழும்பு 10

கம்பெனியின் தற்போதைய பெயர் - நெஸ்லே லங்கா லிமிடெட்

நிறுவனக் காரியதரிசி



## INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
### VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA, MANIPAY
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received **Loan & Grant** from the **World Bank & European Union** towards the cost of **Local Development Support Project (LDSP)**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the works stated in the Table below.

2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP)** on behalf of the **Valikamam south west Pradeshiya Sabha, Manipay** now invites sealed bids from eligible and qualified bidders for the works stated in the Table below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VSWPS/2024/BT4/02 | Improvement work for children park at koolavady (Remaining work of LDSP) | 15.27 | C6 or above Building Construction | 90 | 01-May-2024 | 152,800.00 | 29-May-2024 |
| 02 | LDSP/NP/JAF/VSWPS/2024/PT3/01 | Construction of sub office building of valikamam south west Pradeshiya Sabha at Mathagal Stage-II (Completion work of LDSP) | 16.16 | C6 or above Building Construction | 90 | 01-May-2024 | 161,700.00 | 29-May-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay. (T.P No: 021 225 5381 , Fax No: 021 225 6643)** and inspect the bidding documents at **Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **18-Jan-2024** until **14-Feb-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay** from **18-Jan -2024** until **14- Feb-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,500.00.** The method of payment will be **by cash.**

8. Bids (Original and Copy)shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna road, Manipay, Jaffna** on or before **10:30** Hrs on **15-Feb-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

10. The Pre-Bid Meeting will be held at **Valikamam South West Pradeshiya Sabha, Jaffna road, Manipay, Jaffna** on 31st January 2024 at 11:00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Valikamam South West Pradeshiya Sabha,**
**Jaffna road, Manipay,Jaffna.**

**18.01.2024.**



## பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### கம்பஹா ஆதார வைத்தியசாலையின் OPD Entrance மற்றும் Atrium பகுதிக்குத் தேவையான டைல் மற்றும் மின் துணைப்பாகங்களை கொள்வனவு செய்தல்

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் அளவு | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகாரசபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | காசாக (ரூபா) | வங்கி / காப்புறுதி பிணை முறி (ரூ) |
| PRDA/ WP/ PRO/ 2024/ 02 | டைல் மற்றும் மின் துணைப் பாகங்களை கொள்வனவு செய்தல் | 1000.00 + 2.5%+18% | 27,500.00 | 55,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2024.01.18 முதல் 2024.02.01ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணங்களை ரூ. 1,178.75 இற்கு, (அதிகாரசபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.02.02 பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011 - 4849825 / 011 - 4849845**



## INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
### MANNAR PRADESHIYA SABHA
### WORLD BANK AND EU FUNDED
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

| | |
|---|---|
| **Name of Project** | **Improvement Works for Pre School at Uyilankulam** |
| **Contract No:** | **LDSP/NP/MN/MNPS/2024/PT3/02** |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan to payments under the LDSP PT3 to the Contract for Improvement Works for Pre- School at Uyilankulam, Contract No: LDSP/NP/MN/MNPS/2024/PT3/02

2. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of Mannar Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | Total Cost Estimated (TEC) (Rs. Mn) | Required CIDA Grade | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/MN/MNPS/2024/ PT3/02 | Improvement Works for Pre- School at Uyilankulam | 3.96 | Buildings C8 or above | 50,000.00 | 2024.05.14 | 84 Days |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Buildings Construction for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.

5. Qualification requirements to qualify for contract award is given in Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from Chairman, Mannar Pradeshiya Sabha [Telephone No: 0232050001 / Fax No: 0232050002 / Email ID: mnps2006@gmail.com] and inspect the Bidding Documents at the address Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar from 08:30 hrs to 16:15 hrs.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Mannar Pradeshiya Sabha from 18th of January 2024 until 13th of February 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash.

8. Bids shall be delivered with duplicate to the address at Chairman, Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar on or before 14th February 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. Bids shall be valid up to 14st of May 2024.

10. All bids shall be accompanied by a Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.

11. The Pre-Bid Meeting will be held on 1st of february 2024 at 10:30 hrs at the Main Office of Mannar Pradeshiya Sabha, Kattaspathiri, Mannar.

The address(es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)

Mannar Pradeshiya Sabha
Kattaspathiri, Mannar.
Tel No: 0232050001
Fax No: 0232050002
Email ID: mnps2006@gmail.com

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**இலங்கை புகையிரத பாதைக்கு எஞ்சின் இயக்கும் மின்கலங்கள் 10 S வகுப்பில் டீசல் மல்டிபிள் யூனிட்டுக்கான (ALKALINE) அல்கலைன் மின்கலங்கள் 495 இனை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்.**

**IFB இலக்கம் - SRS F.7877**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் இலங்கை புகையிரத பாதைக்கு எஞ்சின் இயக்கும் மின்கலங்கள் **10 S** வகுப்பில் டீசல் மல்டிபிள் யூனிட்டுக்கான **(ALKALINE)** அல்கலைன் மின்கலங்கள் 495 இனை கொள்வனவு செய்வதற்கான உற்பத்தியாளர்கள் / வழுங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் தங்களால் அதிகாரம் பெற்ற அங்கீகாரம் பெற்ற முகவர் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் **(ICB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை 2024.01.18 ஆம் திகதி 2024.03.04 ஆம் திகதி மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இல : **+94(11) 2438078, +94(11) 2436818**
தொலைநகல் இல: **+94 (11) 2432044**
மின்னஞ்சல் : **srs.slr@gmail.com**
இணையத்தளம் : **www.railway.gov.lk**

4. மனுதாரர் / தயாரிப்பாளர் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரத்தில் ஐந்து வருடங்களுக்கு (05) மேலாக **ALKALINE)** அல்கலைன் மின்கலங்கள் உற்பத்தி செய்திருத்தல் மற்றும் மனுதாரர் / தயாரிப்பாளர் கடந்த (03) மூன்று ஆண்டுகளில் **(ALKALINE)** அல்கலைன் மின்கலங்கள் 500 எண்ணிக்கை அல்லது அதற்கு அதிகமான தொகையை மொத்தமாக மூன்று தடவைகள் உற்பத்தி செய்திருத்தல் வேண்டும். அதில் ஒன்று சர்வதேச புகையிரதத்திற்கு செய்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை புகையிரத சேவைகள், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, பிரதிப் பொது முகாமையாளரிடம் (கொள்முதல்) மீளச்செலுத்தப்படாத ரூ.11,825/- கொள்முதல் கட்டணத்தை செலுத்தி 2024.01.18 ஆம் திகதி முதல் 2024.03.04 ஆம் திகதி காலை பி.ப.3.00 மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக ரூ.470,000.00 இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் 2024.03.05 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்,
கொள்முதல் இல.: **SRS/F.7877**

# புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்
## சுற்றாடல் அமைச்சு

**வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அலுவலகத்திற்கான இட வசதிகளை பெற்றுக்கொள்ளல் மாத்தளை பிரதேச அலுவலகம்**

இப் பணியகத்தின் மாத்தளை பிரதேச அலுவலகம் நடத்திச் செல்வதற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்பட்டுள்ளது. அக் கட்டிடம் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- கட்டிடத்தின் விசாலம் 2500 சதுர அடியாக இருத்தல் வேண்டும்.
- அறைகளின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 04 ஆக இருத்தல் வேண்டும்.
- நகர எல்லையில் இருந்து பிரதான பாதைக்குக்கிட்டிய 05 (ஐந்து) கிலோமீற்றர் எல்லையில் இருத்தல் வேண்டும்.
- குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தில் முறையான அனுமதியை பெற்றுக்கொண்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- அலுவலக உள்ளக மற்றும் வெளி மசலசகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- குறித்த கட்டிடம் சார்பாக ஒதுக்கப்பட்ட குழாய்நீர், மின்சார வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தைச் சுற்றி வாயிற்கதவுடன் பாதுகாப்பு வேலி அல்லது மதில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 02 வாகனமாவது நிறுத்தி வைப்பதற்கு இட வசதிகள் இருத்தல் வேண்டும்
- கட்டிடத்திற்கு இலகுவாக சென்றடையக்கூடிய விதத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

"மாத்தளை பிரதேச அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள்" என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, குறித்த இடத்தில் உறுதியின் பிரதி மற்றும் வரைபட பிரதியையும், கட்டிட உரிமையாளரை தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் 2024.02.01 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் தனது விலைமனுக்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இக்கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர், அவரது அதிகாரமளிக்கக்கூடிய பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**கவனிக்கவும் :**

1. விண்ணப்பங்களில் தேர்ந்தெடுக்கப்படும் கட்டிடம் பணியகத்திற்காக குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்படும் போது அக்கட்டிடம் தீ / திருட்டு மற்றும் அனர்த்தங்களுக்காக காப்புறுதி செய்தல் உரிமையாளரின் பொறுப்பாகும்.
2. கட்டிட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை மீண்டும் அரச மதீப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569,**
**எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு
## மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு
## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

திருகோணமலையிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் இபெகூ தாங்கி பண்ணையின் (24 தாங்கிகள்) நிலப்பரப்பு ஆய்விற்கான **(Topographical Survey)** விலைமனுக்கள்

**B/01/2024**

"திருகோணமலையிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் இபெகூ தாங்கி பண்ணையின் (24 தாங்கிகள்) நிலப்பரப்பு ஆய்வு (Topographical Survey)" எனும் ஒப்பந்தத்திற்காக இதனையொத்த வேலைகளில் முன்னனுபவம் வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ஒரு தொகுதிக்கு ரூ. 826.79 + 2.5% SSCL + 15% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-02-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் ஆர்வமுள்ள தரப்பினரின் பார்வைக்காக மட்டும் CPC இணையதளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.

சகல விலைமனுக்களுடனும் 30,000.00 தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

திருகோணமலை தாங்கி பண்ணை இடப்பரப்பில் 2024-01-26ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் இந்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

விலைமனுக்கள் 2024-02-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடுகள்,**
**1ஆம் தளம், இல. 01 ஆவது மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455335 தொலைநகல்: 011-5455424**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/004<br>வாடகைக்கு சிங்கிள் கெப்<br>நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 31-01-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,<br>(திருகோணமலை)<br>026-2220060<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/005<br>வாடகைக்கு வான்<br>மின் அத்தியட்சகர் (நகர மின் பாவனையாளர் சேவை நிலையம்) - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 31-01-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம்,<br>(திருகோணமலை)<br>026-2220060<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/006<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (வர்த்தகம்) - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 31-01-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம்,<br>(திருகோணமலை)<br>026-2220060<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன்

கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

## 2015 இல. 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 131ம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் முழு இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோரல்

சீதுவ, நீர்கொழும்பு வீதியில் 590ம் இலக்கத்தில் அமைந்துள்ள எஸ்.எஸ். மெடிகல் எனும் மருந்தகத்தின் உரிமையாளரான விஜேந்ர ஆச்சாரிகே லக்ஷ்மன் குமாரசிரி ஆகிய நான் மேற்படி மருந்தகத்தில் மருந்தாளர் இன்றி மருந்துகளை விற்றல் மற்றும் கூடிய விலைக்கு விற்றல் போன்றதான சில குற்றச்சாட்டுகளுக்கு நீர்கொழும்பு கௌரவ நீதவான் நீதிமன்றத்தில் 2023.11.30ம் திகதி தொடுக்கப்பட்ட இலக்கம் **M68777** வழக்கில் நான் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் அதற்காக எனக்கு கௌரவ நீதிமன்றத்தினால் ரூபா 50,000/- தண்டத் தொகை நியமிக்கப்பட்டதாகவும் அது என்னால் செலுத்தப்பட்டதாகவும் இலங்கை மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

இதுவாறான குற்றமொன்று இதன் பிறகு இழைக்கப்படமாட்டாது எனவும் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக சகல இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோருவதாகவும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- விஜேந்ர ஆச்சாரிகே லக்ஷ்மன் குமாரசிரி**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

(இணைப்பு 01)

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் ஆதனம் வலுவிழக்கச் செய்யும் அறிவித்தல்

பின்வருமாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 35ஆம் இலக்க அத்தியாயத்தின் பிரகாரம் சட்டவிரோத செயற்பாடுகள் அல்லது ஏதாவது சட்டவிரோத செயற்பாடுகளினால் பெற்றுக்கொண்ட பணத்தினால் பெறப்பட்டு உரிமையாக்கிக் கொண்டுள்ளது தெரிய வந்துள்ளதால் அந்தச் சட்டத்தின் 7வது மற்றும் 8வது அத்தியாயத்தின் பிரகாரம் 2024-01-11ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்திற்கு மேல் நீதிமன்றத்தில் SPL/01/2024 இலக்கத்தின் கீழ் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இல. 134/டீ/2, மல்கொன, பெத்தியாகொட, கம்பஹா எனும் முகவரியிலுள்ள மாரசிங்க ஜேடிகே துஷார குமாரசிரி பெயரில் உள்ள பின்வரும் வாகனம்

NG 4666 பஸ் வண்டி, NG 3666 பஸ் வண்டி

இல. 134/டீ/2, மல்கொன, பெத்தியாகொட, கம்பஹா எனும் முகவரியிலுள்ள ஹீரலு எடிப்புலிகே தும்மி குமுதுகுமாரி என்பவரின் பெயரில் உள்ள பின்வரும் வாகனம்

WP BII 8938 TVS வகையான மோட்டார் சைக்கிள்

இந்த ஆதனங்கள் தொடர்பில் உரிமைத்துவத்தை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம்,

**பதிவாளர்,**
**கம்பஹா மேல் நீதிமன்றம்.**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கம் | அதிவேக நெடுஞ்சாலைப் பிரிவு |
|---|---|---|
| Purchasing of LED DRIVERS for Road Lights | RDA/EOM&M/Beli/Pro/Bid/2024/05 | வடக்குத் திசை அதிவேக நெடுஞ்சாலையின் நீடிப்பு (கொடகமவிலிருந்து மத்தள வரையும்) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.07 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (தொலைபேசி: 0472251892, 0766265264, 0763179185)

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர், (அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு), மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹவத்த,**
**பெலிஅத்த.**

CSIAP THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### கமத்தொழில் அமைச்சு
### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்
### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)

**Project No.: P163742**

கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) – உலக வங்கி, 125 மில்லியனுக்கு நிகரான கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பொருட்களின் பெறுகைக்காக காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் (CSIAP) சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாண பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   அ) கிழக்கு மாகாண வீட்டுத்தோட்ட திட்டம் 2022, யால என்பதற்கான பெறுகை பின்வருமாறு: Inter Cultivator, ~~Knap sack sprayer~~, Groundnut pod separators, ~~Grass Cutter, Seed Paddy Cleaner~~, Cowpea Threshing Machine, Hand Fork, Hand Spade, Secateurs and I unit of Black gram Skin Remover. Contract No.: LK-MOA-278866-GO-RFB/EP/DPDO/I. Cult (14)/2022/019.

| தொகுதி இல. | ஒப்பந்த இல. | வழங்கலின் விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | இ.ரூபாவில் விலைமனுப் பிணை உத்தரவாதம் மற்றும் செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 1. | LK-MOA-278866-GO-RFB/EP/DPDO/I. Cult (14) 2022/019 | Supplying of Inter Cultivator | 41 எண்ணிக்கைகள் | 3500 இலங்கை ரூபா | 72,000.00 2024 மே 15 ஆம் திகதியன்று |
| 2. | | Supplying of Ground nut Pod Separators | 03 எண்ணிக்கைகள் | | 180,000.00 2024 மே 15 ஆம் திகதியன்று |
| 3. | | Supplying of Cowpea Threshing Machine | 03 எண்ணிக்கைகள் | | 180,000.00 2024 மே 15 ஆம் திகதியன்று |
| 4. | | Supplying of Black gram Skin Remover | 01 எண்ணிக்கை | | 7,500.00 2024 மே 15 ஆம் திகதியன்று |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் விலைக்கோரல் மூலம் நடத்தப்படும்.
4. விலைமனுதாரர் ஒன்றிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு அதே விலைமனுவில் விலைமனுக்களுக்கு சமர்ப்பிப்பதற்கு சுதந்திரமுண்டு ஆனால் உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டிருந்தால் மாத்திரமே. ஆனால் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட தகவுத்திறன், நிதியிடல் மற்றும் விலைமனுதாரரின் ஏனைய திறன் வரையறுப்புக்களுக்கமைவாகவே தெரிவானது மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை திருகோணமலை, உப்புவெளி, லவ் லேன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்ட, கிழக்கு மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல : 026-2054999, தொலைநகல் இல : 026-2054999, மின்னஞ்சல் : dpdepcsiap@gmail.com) விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே இடத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2024 ஜனவரி 18 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 06 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர், 5 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள முகவரியான செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தின் மூலப்பிரதியில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தை தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனு ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. மேலேயுள்ள 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2024 ஜனவரி 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக் கூட்டமானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் சமுகமளிப்பதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தின் விஷேடமாக குறிப்புக்கள், ITB மற்றும் ஒப்பந்த தரவு ஆகியவற்றுடன் சிறந்த பரிச்சயமுடையவராகவிருத்தல் வேண்டும்.
9. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலே குறித்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு இல்லாத எந்தவொரு விலைமனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு, முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பொருட்களின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்படல் வேண்டும்.
11. 2024 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் இந்த நோக்கத்திற்காக 5 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியான செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
12. விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்,**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன், உப்புவெளி,**

## INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**

### MUSALI PRADESHIYA SABHA

**WORLD BANK/EU FUNDED**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

| | |
|---|---|
| Name of Project | Facilitate Water & Electricity and Improve Landscape for Existing Market Building |
| Contract No: | LDSP/NP/MN/MUPS/2024/PT2/02 |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan/Credit from World Bank (WB)/EU towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan/Credit to payments under the LDSP PT2 to the Contract for Facilitate Water & Electricity and Improve Landscape for Existing Market Building, Contract No: LDSP/NP/MN/MUPS/2024/PT2/02
2. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of Musali Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | Total Cost Estimated (TEC) (Rs. Mn) | Required CIDA Grade | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/MN/MUPS/2024/PT2/02 | Facilitate Water & Electricity and Improve Landscape for Existing Market Building | 10.858 | Building C6 or above | 165,000.00 | 11.06.2024 | 119 Days |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Building Construction for the Grade mentioned in the table above and possess valid Business or Company Registration.
5. Qualification requirements to qualify for contract award are given in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar [Telephone No: 023-2223871 / Fax No: 023-2051672 / Email ID: musalips@gmail.com] and inspect the Bidding Documents at the address Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 08:30 hrs to 15:00 hrs on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 18th of January 2024 until 14th of February 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash.
8. Bids shall be delivered with duplicate to the address at Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar on or before 15th February 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to 14th of May 2024.
10. All bids shall be accompanied by a Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same in the Sub Clause 16.2 of Section 5 (Bidding Data).
11. The Pre-Bid Meeting will be held on 01st of February 2024 at 10:30 hrs at the Main Office of Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar.

The address (es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Musali Pradeshiya Sabha
Chilawathurai, Mannar.
Tel No: 023-2223871
Fax No: 023-2051672
Email ID: musalips@gmail.com

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**Tender Ref. : Q 15/24**

**TENDER FOR SUPPLY OF DIALYSIS CONSUMABLE WITH MACHINE INVESTMENT BASIS**

அ. Dialysis Consumable with machine investment basis (Supply & Maintain of **14 Nos. dialysis Machines & 01 No. R.O. Plant**) என்பதனை 5 வருட கால எல்லைக்கு வழங்குவதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆ. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

இ. 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.07 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3,500 ரூபா) செலுத்திய பின்னர், நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

ஈ. 2024.02.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.02.08 ஆம் திகதியன்று சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

உ. 2024.01.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர**
**பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABC-5978 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAW-3393 | பஜாஜ் | 2015 | ராகம |
| YX-4278 | பஜாஜ் | 2012 | ராகம |
| YJ-9062 | பஜாஜ் | 2011 | கண்டி |
| YT-6600 | பஜாஜ் | 2011 | ராகம |
| YD-0964 | பஜாஜ் | 2010 | ராகம |
| YH-2027 | பஜாஜ் | 2010 | ராகம |
| YC-6683 | பஜாஜ் | 2010 | ராகம |
| YB-8335 | பஜாஜ் | 2010 | ராகம |
| QX-5336 | பஜாஜ | 2010 | ராகம |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CAX-7781 | ஹோண்டா | 2017 | ராகம |
| CAK-6117 | சுசுகி | 2015 | ராகம |
| KL-1649 | பெரோடுவா | 2011 | ராகம |
| HJ-3380 | டொயோட்டா | 2003 | ராகம |
| KE-6148 | டொயோட்டா | 2003 | ராகம |
| HT-5293 | ஹுண்டாய் | 2000 | ராகம |
| 300-7191 | ஹோண்டா | 1995 | ராகம |
| 18-0229 | மஸ்தா | 1991 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAE-7969 | டாடா | 2016 | ராகம |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 68-1761 | ISUZU | 1992 | ராகம |

| இரட்டை நோக்கம கொண்ட வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 251-7587 | ISUZU | 1993 | பாணடுரா |
| 50-3479 | டொயோட்டா | 1986 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285

கண்டி 0773 972 860

பாணடுரா 0775 215 263

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பிழை திருத்தம்

**வடமேற்கு மாகாண சபை - மாகாண கல்வித் திணைக்களம்**

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

2024 ஜனவரி 11 ஆம் திகதியன்று தினகரன் பத்திரிகையில் 08 ஆம் இலக்க பக்கத்தில் மேலே தலையங்கமிடப்பட்ட விளம்பரம் தொடர்பானது.

07 ஆம் இலக்க அம்சமானது பின்வருமாறு திருத்தி வாசிக்கப்பட வேண்டுமென தயவு செய்து கவனிக்கவும்.

07. விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2024 ஜனவரி 24 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**J.A.M.P. Jayathilake**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**(வடமேல் மாகாணம்)**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**Construction of Generator Room and Supplying, Installation, Testing and Commissioning of 35Kva Automatic Main Failure Silent Type Three Phase Diesel Generator at Labour Office, Mahiyanganaya. [Contract No.: BD-192/Z5/22/RCT02/2024]**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 11.0 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீட்டு செய்யப்பட்டதும் மஹியங்கனய தொழில் அலுவலகத்தில் ''Construction of Generator Room and Supplying, Installation, Testing and Commissioning of 35Kva Automatic Main Failure Silent Type Three Phase Diesel Generator" என்பதற்காக தகுதியும் தகைமையுமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
   நிர்மாணக் கால எல்லையானது 91 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக நடாத்தப்படும். இப்பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் *CIDA* தர முன்னுரிமை ஆகியன *04/2016(iii)* மற்றும் *03/2020* ஆகிய இலக்கங்களுடைய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கட்டிட நிர்மாணத் துறையில் சி-7, சி-6 அல்லது சி-5 தரங்களில் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   ''விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-3 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகைகள் வழங்கப்படமாட்டாது".
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கண்டி, கட்டிடங்கள் திணைக்களம், 5 ஆம் வலய பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 081 2236653. தொலைநகல்: 081 2234255.
5. 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.01 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக நாலாயிரம் ரூபாவை (4,000 ரூபா) செலுத்திய பின்னர், கண்டி, கட்டிடங்கள் திணைக்கள 5 ஆம் வலய பிரதான பொறியியலாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.02.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கண்டி, கட்டிடங்கள் திணைக்களம், 5 ஆம் வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகம், 5 ஆம் வலய பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அதே முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் கண்டி, கட்டிடங்கள் திணைக்கள 5 ஆம் வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்களை பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள வகையில் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 9 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 165,000 ரூபா தொகைக்கானது.
   - 2024 மே 17 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் ITB 16.2 ஆம் ஷரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

**பொறியியலாளர் ஏ.எம். விக்ரமசிங்ஹ,**
**பணிப்பாளர் - நிர்மாணம் (1 ஆம் பிராந்தியம்),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய",**
**பத்தரமுல்ல.**

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

## 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை 2024 ஆம் ஆண்டில் வழங்குவதற்காக கட்டிடங்கள் திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

| அம்ச இல. | விளக்கம் | பதிவு செய்தலுக்கான கட்டணம் |
|---|---|---|
| **பொருட்கள்** | | |
| G1 | Office Stationery | 1000/= |
| G2 | Toners & Ink Cartridges for Printers & Photocopiers & Fax Machines | 1000/= |
| G3 | Tracing Paper Rolls & White Paper Rolls | 1000/= |
| G4 | Supply of Tyres and car Batteries | 1000/= |
| G5 | Supply of Computer Accessories | 1000/= |
| **சேவைகள்** | | |
| S1 | Repairs & Services of Motor Vehicles (Cars, Vans, Double Cabs) | 1000/= |
| S2 | Carpeting and Cushioning works of Motor Vehicles | 1000/= |
| S3 | Offset Printing and Binding | 1000/= |

1. www.buildings.gov.lk என்ற திணைக்கள இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தக்காரரொருவர்/சேவை வழங்குநர் ஒரு வகுதிக்கு மேலதிகமாக விண்ணப்பிக்க விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்ப படிவத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள சான்று ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எந்தவொரு ஆவணத்தின் சமர்ப்பித்தல் அல்லாத அல்லது ஒரு பகுதி சமர்ப்பித்தல் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். நிராகரிப்பதற்கான எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் நிராகரிப்பதற்கான உரிமையை கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.
4. பொதுவாக விலைமனுக்கோரல்கள் வழங்குநர்கள்/சேவை வழங்குநர்களின் பதிவு பெற்ற பட்டியலிலிருந்தே அழைக்கப்படும். ஆனால், வேறேதாவது வளங்களிலிருந்து விலைமனுக்கோரல்களை அழைப்பித்து தேவைப்பாடுகளை கொள்வனவு செய்வதற்கான உரிமையை திணைக்களம் கொண்டுள்ளது.
5. பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு வழங்குநர் அல்லது சேவை வழங்குநர் திணைக்களத்தினால் விலைமனுக்கள் கோரப்படும் வேளையில் தொடர்ச்சியாக இரு தடைவைகளுக்கு பதிலிறுக்கப்படாவிடின், அவ்வாறான ஒப்பந்தக்காரர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவார்கள்.
6. 2024.02.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', கட்டிடங்கள் திணைக்களம், கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Registration of Suppliers and Service Providers for the Year 2024" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
7. உரித்தான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தை ரொக்கப் பணத்தில் ஒவ்வொரு வகுதிக்கும் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். ரொக்கப் பணக்கொடுப்பனவானது தலைமையகத்தில் அல்லது திணைக்களத்தின் எந்தவொரு வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் செலுத்தப்படல் வேண்டும். மாற்று வழியாக, உங்கள் பணக்கொடுப்பனவை பத்தரமுல்ல இலங்கை வங்கி கிளையின் 7042710 என்ற கணக்கிலக்கத்திற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் செலுத்தப்படலாம்.
8. மேலதிக தகவலுக்கு நீங்கள் 011-2179708 என்ற தொலைபேசி வழியாகவும் 011-2868285 என்ற தொலைநகல் இலக்கத்தின் வழியாகவும் ஒப்பந்தங்களுக்கான பிரதான பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்களுக்கான பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய",**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**புத்தசாசன, மதவிவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு நடமாடும் ராக்கை அமைப்பை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல்**

**Contract No.: DNA/2/MA2/1/1/5**

01. கீழே விபரிக்கப்பட்டவாறு கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 7 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்களத்திற்காக நடமாடும் ராக்கை அமைப்பை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தேசிய சுவடிகள் திணைக்களத்தின் தேசிய சுவடிகள் பணிப்பாளர் நாயகம் அழைக்கின்றார். Contract No.: DNA/2/MA2/1/1/5.
    கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பிரதான கட்டிடத்திற்காக நடமாடும் ராக்கை அமைப்பை குறைபாடு பொறுப்பு காலத்திற்கும் வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை இவ்வேலையானது கொண்டுள்ளது.
    செயற்றிட்ட அமைவிடம்: கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்களம்.
    இலங்கை ரூபாவில் முழுமையான வேலைக்குமான பொறியியலாளரின் மதிப்பீடு: 850 மில்லியன் ரூபா.
    பூர்த்தி செய்யப்படுவதற்கான காலம்: 539 நாட்கள்
02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் அனைத்து தேவைப்படுத்தல்களையும் பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும்.
    விலைமனுதாரரானவர் ஒன்றில் உள்ளூர் உற்பத்தியாளராகவிருத்தல் அல்லது உற்பத்தியாளரின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவராகவிருத்தல்.
    ராக்கை அமைப்புகளில் வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமை தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
    உபகரணத்தின் உற்பத்தியாளரானவர் உருவமைத்தல் மற்றும் நடமாடும் ராக்கை அமைப்பின் உற்பத்தியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை கடந்த ஏழு (07) வருடங்களில் இலங்கை ரூபாவில் 200 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியான வேலையை பூர்த்தி செய்திருத்தல்.
    கடந்த பத்து (10) வருடங்களில் எந்தவொரு ஐந்து (05) வருட வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது 650 மில்லியன் ரூபாவாகவிருத்தல்.
    விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவைக் கொண்டிருத்தல்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள நிருவாகத்திற்கான பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 071-1037944, 011-2688758, தொலைநகல்: 011-2693309)
06. 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.14 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள தேசிய சுவடிகளுக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
07. 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.14 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள நிருவாகத்திற்கான பிரதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். (தொலைபேசி: 071-1037944, 011-2688758)
08. கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள மாநாட்டு அறையில் 2024.01.24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்கள் பங்குபெறுபவர்களின் விபரங்களை (பெயர், தேஅஅ இலக்கம், கம்பனி மற்றும் பதவி) ஆகியவற்றை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள நிருவாகத்திற்கான பிரதிப் பணிப்பாளருக்கு கூட்டத்திற்கு 3 வேலை நாட்களுக்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும். (தொலைபேசி: 071-1037944, 011-2688758. தொலைநகல்: 0112632430 மின்னஞ்சல்: ddadmin@archives.gov.lk)
09. விலைமனுக்கள் 2024.05.16 ஆம் திகதியன்று வரையும் (91 நாட்கள் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் 10,200,000 ரூபா பெறுமதியுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் 2024.06.13 ஆம் திகதியன்று வரையும் (119 நாட்கள் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
12. 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள புதிய கட்டிட 1 ஆம் மாடியிலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள மாநாட்டு அறையில் மூடப்பட்டு, திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம் - தேசிய சுவடிகள்,**
**தேசிய சுவடிகள் திணைக்களம்,**
**இல.: 07, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**18.01.2024.**

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118**

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

PF-6414 Mahindra genio, 2014 cab. அதியுய ர் விலைக்கு வெலி பெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 004160

WP CAQ - 170 0 NISSAN-DA A -HT 32-X - TRAIL-JEEP-2015 - WHIT E அ தியுய ர் வி லைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட். 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொலைபேசி 0812 081033. 004168

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QO-6144 Bajaj 2008, QG-5748 Bajaj 2006, QX-1379 Bajaj 2010, QH-1632 Bajaj 2006 threewheel. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலை பேசி 0714 542958. 004158

**Repeat Your ad For Better Offers**


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1. | இராமகிருஷ்ணன் மிஷன், கல்லடி, கிழக்கு பல்கலைக்கழக விடுதி அணுகல் வீதி, போதனா வைத்தியசாலை வீதியின் நிர்மாணம் (படிநிலை - 01) |
| 2. | இராமகிருஷ்ணன் மிஷன், கல்லடி, கிழக்கு பல்கலைக்கழக விடுதி அணுகல் வீதி, போதனா வைத்தியசாலை வீதியின் நிர்மாணம் (படிநிலை - 02) |
| 3. | மகிலூர் உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 03) |
| 4. | மகிலூர் உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 04) |
| 5. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 03) |
| 6. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 04) |
| 7. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 05) |
| 8. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 06) |
| 9. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 07) |
| 10. | சங்கன்கேணி, மைதான வீதியின் நிர்மாணம் (படிநிலை - 08) |
| 11. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 04) |
| 12. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 05) |
| 13. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 06) |
| 14. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 07) |
| 15. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 08) |
| 16. | களுவாஞ்சிக்குடி கிராம உள்ளக வீதியின் நிர்மாணம் (படிநிலை - 09) |
| 17. | மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய கல்லாறு பாடசாலை உள்ளக வீதியை மேம்படுத்துதல் |
| 18. | கோட்டைக் கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (படிநிலை - 03) |
| 19. | கோட்டைக் கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (படிநிலை - 04) |
| 20. | பெரிய கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (பொதி - 01) |
| 21. | பெரிய கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (பொதி - 02) |
| 22. | பெரிய கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (பொதி - 03) |
| 23. | பெரிய கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (பொதி - 04) |
| 24. | பெரிய கல்லாறு உள்ளக வீதியின் நிர்மாணம் - (பொதி - 05) |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-18ஆம் திகதி முதல் 2024-01-24ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**

**NANATTAN PRADESHIYA SABHA**

**EUROPEAN UNION (EU) & WORLD BANK (WB) FUNDED**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Fund from European Union (EU) and from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this fund to payments under the LDSP PT3 and to payments under the LDSP BT4
2. The Chairman of Local Authority Procurement Committee (LAPC) on behalf of Nanattan Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | TEC Rs. in Mn | CIDA | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/MN/NAPS/2024/PT3/03 | Continuation of Balance works of Improvement Works for Main Office Building of Nanattan PS | 6.612 | Buildings C7 or above | 75,000.00 | 2024.06.14 | 84 Days |
| 02 | LDSP/NP/MN/NAPS/2024/BT4/01 | Continuation of Balance works of Constructions of Shopping Units at Murunkanpiddy Public Market - Stage III | 8.842 | Buildings C7 or above | 100,000.00 | 2024.06.14 | 84 Days |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Buildings Construction for the Grade C7 or above and possess valid Business or Company Registration.
5. Qualification requirements to qualify for contract award is given in Section 5 of the Schedule in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from the Chairman, Nanattan Pradeshiya Sabha [Telephone No: 0232050652 / Fax No: 0232051720 / Email ID: nanattanpsabha@gmail.com] and inspect Bidding Documents at address Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar from 08:30 hrs to 16:15 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Chairman, Nanattan Pradeshiya Sabha from 18th of January 2024 until 15th of February 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash.
8. Bids shall be delivered with duplicate to the address at the Chairman, Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar on or before 16th February 2024 at 10:30 hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to 17th of May 2024.
10. All bids shall be accompanied by a **Bid-Security**, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.
11. The Pre-Bid Meeting will be held on 08th of February 2024 at 10:30 hrs at the Main Office of Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar.

The address(es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Nanattan Pradeshiya Sabha
Nanattan, Mannar.

Tel No: 0232050652
Fax No: 0232051720
Email ID: nanattanpsabha@gmail.com

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/23/PT/01/061 | T-Shirts (Color with Logo) 7500 Nos. for year 2024 | 127,000.00 | 3,500.00 | 2024.02.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/14/068 | Spares for UD Nissan Prime Movers | 20,000.00 | 1,000.00 | 2024.02.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/11/055 | 2100 Liters of Taro 30DP SAE 40 | 45,000.00 | 1,000.00 | 2024.02.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/14/048 | Upgrading of Virtual Machine infracture for SLPA | 1,000,000.00 | 20,000.00 | 2024.02.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/11/054 | Spares for IHI PIC Rover Mobile Cranes | 25,000.00 | 1,000.00 | 2024.02.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/08/072 | Spares for Isuzu NLR Crew Cabs (PK 3446) | 38,000.00 | 1,000.00 | 2024.02.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/17/065 | 4000 PRS of Safety Shoes – Year 2024 | 430,000.00 | 3,500.00 | 2024.02.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/06/051 | 02 Nos. of Bilges Pumps for the Launch Mooring III | 60,000.00 | 1,000.00 | 2024.02.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/07/062 | 24 Nos. of Air Filters for CAT C32 Engine of Launches: Pilot 16,17 and 18 | 60,000.00 | 1,000.00 | 2024.02.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/17/068 | Spares for UD Nissan Prime Movers | 20,000.00 | 1,000.00 | 2024.02.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜனவரி 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாணத்திற்கு விதை உருளைக்கிழங்கை (Red La Soda) வழங்கல் மற்றும் விநியோகித்தல்**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை ஊவா மாகாணத்திற்கு விதை உருளைக்கிழங்கை **(Red La Soda)** வழங்கல் மற்றும் விநியோகித்தல் என்ற ஒப்பந்தத்தின் கீழ் தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. ஊவா மாகாணத்திற்காக விதை உருளைக்கிழங்கை வழங்கல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | அளவு | விலைமனுப்பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| ஊவா மாகாணத்திற்காக விதை உருளைக்கிழங்கை (Red La Soda) வழங்கல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-365768-GO-RFB | 40,000 Kg | 420,000.00 | 7,500,00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024.01.18 ஆம் திகதியிலிருந்து 2024.02.07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறை இருத்தல் வேண்டும்.
6. 2024.02.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2024.02.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **"''Supply and Delivery of Seed Potato (Red La Soda) for Uva Province"** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 18.01.2024**

# இலங்கை – சிம்பாப்வே தொடரை தீர்மானிக்கும் 3ஆவது டி20 இன்று



சிம்பாப்வேயுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் தோல்வியை சந்தித்த இலங்கை அணி தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் இன்று (18) களமிறங்கவுள்ளது.

ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது டி20 போட்டியில் கடைசி ஓவர் வரை இலங்கை அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்த போதும், அஞ்சலோ மத்தியூஸ் வீசிய கடைசி ஓவரில் சிம்பாப்வேயுக்கு தேவையான 20 ஓவர்களும் பெறப்பட்டன.

இதனால் இந்த டி20 தொடர் 1–1 என சமநிலை பெற்றிருக்கும் நிலையிலேயே இன்று ஆர். பிரேமதாச மைதானத்தில் மூன்றாவது டி20 போட்டி நடைபெற்றவுள்ளது. டி20 சர்வதேச போட்டி ஒன்றில் சிம்பாப்வேயுக்கு எதிராக முதல் தோல்வியை சந்தித்த வனிந்து ஹசரங்க தலைமையிலான இலங்கை அணி தொடர் தோல்வியை தவிர்ப்பதற்கு இன்றைய தினத்தில் போராட வேண்டியுள்ளது. அஞ்சலோ மத்தியூஸ் கடந்த போட்டியின் கடைசி ஓவர் தவிர்த்து முதல் இரண்டு போட்டிகளிலும் சோபித்து வரும் நிலையில் இன்றைய தினம் அவரது ஆட்டம் தீர்க்கமானதாக அமையும். எனினும் இலங்கை ஆரம்ப வரிசை தடுமாற்றம் கண்டு வருகிறது.

குறிப்பாக குசல் பெரேரா கடந்த போட்டியில் டக் அவுட் ஆனதோடு பத்தும் நிசங்கவும் முதல் இரு போட்டிகளிலும் ஓட்டங்களை பெறத் தவறினார். அணியின் மத்திய வரிசை சிறப்பாக செயற்பட்டு வருகிறது. இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசையும் வலுவாக இருக்கும் நிலையில் இன்றைய போட்டியில் அணியில் மாற்றங்கள் செய்ய வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

சிகந்தர் ராசா தலைமையிலான சிம்பாப்வே அணி இலங்கைக்கு தொடர்ந்து சவால் கொடுத்து வரும் நிலையில் அது தொடரை கைப்பற்ற கடுமையாகப் போராடும்.




# அலனின் சாதனை ஓட்டத்தால் நியூசிலாந்து தொடர் வெற்றி



பின் அலனின் அதிரடி சதத்தின் உதவியோடு பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியிலும் 45 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரை 3–0 என வென்றது.

டுனிடினில் நேற்று (17) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து சார்பில் அலன் 62 பந்துகளில் 137 ஓட்டங்களை பெற்று டி20 போட்டியில் நியூசிலாந்து சார்பில் அதிகூடிய ஓட்டங்களை பெற்றவராக சாதனை படைத்தார்.

இதன்போது அவர் 16 சிக்ஸர்களை விளாசி டி20 சர்வதேச போட்டியில் அதிக சிக்ஸர்கள் விளாசிய ஆப்கானின் ஹசரதுல்ல சசாயின் சாதனையை சமப்படுத்தினார்.

இதன்போது ஹரிஸ் ரவுப் வீசிய ஒரே ஓவரில் அலன் 27 ஓட்டங்களை விளாசினார். அப்போது அவர் பந்தை மைதானத்திற்கு வெளியில் மூன்று தடவைகள் அடித்ததால் நடுவர் மூன்று முறை பந்தை மாற்ற வேண்டி ஏற்பட்டது.

இதன்மூலம் நியூசிலாந்து அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 224 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்களையே பெற்றது. பாபர் அஸாம் 37 பந்துகளில் 58 ஓட்டங்களை பெற்றார்.

தொடரின் கடைசி இரு போட்டிகளும் நாளை மற்றும் வரும் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்சேர்ச்சில் நடைபெறவுள்ளன.

# பாகிஸ்தானிலும் ஈரான் ஏவுகணை தாக்குதல்



அண்டை நாடான ஈரான் நடத்திய தாக்குதலில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டு மேலும் மூவம் காயமடைந்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஜெய்ஷ் அல் அதில் ஆயுதக் குழுவுடன் தொடர்புபட்ட இரு தளங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது. ஆனால், இதனை நிராகரித்திருக்கும் பாகிஸ்தான், சட்டவிரோதமான செயல் என கூறி இருப்பதோடு “தீவிர விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்” என்று எச்சரித்துள்ளது.

முன்னதாக ஈராக் மற்றும் சிரியா மீது தாக்குதல் நடத்திய பின்னர் மூன்றாவது நாடாகவே கடந்த செவ்வாய்க்கிழமை (16) பாகிஸ்தானிலும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் பலுகிஸ்தானின் தென் மேற்கு மாகாணத்தில் கிராமம் ஒன்றிலேயே ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரானிய பொலிஸ் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்ட கடந்த மாதம் எல்லையை ஒட்டி நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றுடன் தொடர்புபட்டே ஜெய்ஷ் அல் அதில் குழு மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிரேக்க கப்பலின் மீது ஹூத்திக்கள் தாக்குதல்



செங்கடலில் கிரேக்கத்திற்கு சொந்தமான சரக்கு கப்பல் ஒன்றின் மீது யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் ஒன்றை நடத்திய நிலையில் அந்த கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹூத்திக்களின் தாக்குதல்கள் மற்றும் அமெரிக்கா, பிரிட்டனின் பதில் தாக்குதல்கள் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் பிராந்தியத்தில் பரவும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

“வர்த்தகக் கப்பல்கள் மற்றும் அமெரிக்க கடற்படை கப்பல்களுக்கு உடனடி அச்சுறுத்தலான நான்கு ஹூத்தி பலிஸ்டிக் ஏவுகணைகளுக்கு எதிராக தற்காப்பு தாக்குதல்களை அமெரிக்கா மேற்கொண்டது” என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இது ஹூத்திக்களுக்கு எதிராக ஒரு வாரத்திற்குள் இடம்பெறும் மூன்றாவது தாக்குதலாக உள்ளது.

முன்னதாக மோல்டா கொடியுடனான கிரேக்கத்திற்கு சொந்தமாக கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் ஒன்று இடம்பெற்றதை கடல்சார் அச்சுறுத்தல் முகாமைத்துவ நிறுவனமான அம்ப்ரி உறுதி செய்தது. இந்தக் கப்பல் இஸ்ரேல் சென்று திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்சுங்கை பின்தள்ளி ஆப்பிள் முதலிடம்



ஆப்பில் நிறுவனத்தின் ஐபோன் முதன்முறையாக உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் கைபேசியாக உருவெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு 234.6 மில்லியன் ஐபோன் கைபேசிகள் விற்கப்பட்டதாக சர்வதேச தரவு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி 12 ஆண்டுகளாக முதல் இடத்தில் இருந்த சம்சுங் நிறுவனத்தை அது பின்னுக்குத் தள்ளியது. சம்சுங் கடந்த ஆண்டு 226.6 மில்லியன் கைபேசிகளை விற்றுள்ளது. சம்சுங் போன்று ஹூவாவி, கூகுள், சியோமி போன்ற பல நிறுவனங்கள் அன்ட்ரோயிட் செயலியை பயன்படுத்துவதால் சம்சுங் நிறுவனத்திற்கு கடும் போட்டி இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# மத சுதந்திரத்திற்கு உலகெங்கும் சவால்



உலகளாவிய ரீதியில் மத சுதந்திரம் சவால்களுக்கு உள்ளாகியுள்ளதாக அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

மத சுதந்திரம் கட்டமைப்பு ரீதியாகவும் முறையாகவும் சவால்களுக்கு உள்ளாவது ஆழமாக வேரூன்றியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சர்வதேச மத சுதந்திரச் சட்டத்தை அமெரிக்க கொங்கிரஸ் 1998 இல் நிறைவேற்றியது. அன்றிலிருந்து மத மற்றும் நம்பிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்து முன்னேற்றுவது அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் முக்கிய நோக்கமாக உள்ளது என்றார்.

மத சிறுபான்மை சமூகங்கள் மீதும் அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல்கள் நடாத்தப்படல், வகுப்புவாத வன்முறை மற்றும் அமைதியான வெளிப்பாட்டிற்காக நீண்டகால சிறைத் தண்டனை அளித்தல், நாடுகடந்த அடக்குமுறைகள் இடம்பெறுகின்ற. மத சமூகங்களுக்கு எதிரான வன்முறைகளை அரசாங்கங்கள் நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# உக்கிர தாக்குதல்களுக்கு மத்தியில் காசாவுக்கு உதவிகள் செல்ல இஸ்ரேல்–ஹமாஸ் உடன்பாடு



இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு மத்தியிலும் கட்டார் மற்றும் பிரான்ஸின் மத்தியஸ்தத்தில் காசாவில் உள்ள பணயக்கைதிகள் மற்றும் பொதுமக்களுக்கு மருத்துவ உதவிகள் நேற்று (17) கொண்டு செல்லப்பட்டன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது சுமார் 250 பேர் பணயக்கைதிகளாக கடத்திச் செல்லப்பட்ட நிலையில், தொடர்ந்து சுமார் 132 பணயக்கைதிகள் போராளிகளின் பிடியில் உள்ளனர். இவர்களில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

எஞ்சியுள்ள பணயக்கைதிகளின் நிலை தொடர்பில் இஸ்ரேலில் கவலை அதிகரித்திருப்பதோடு, இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதலுக்கு மத்தியில் முற்றுகையில் உள்ள காசாவில் பஞ்சம் மற்றும் நோய்கள் பரவுவது தொடர்பில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வரும் சூழலில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான சர்வதேச அழுத்தமும் அதிகரித்துள்ளது. “இஸ்ரேலிய பணயக்கைதிகளுக்கு தேவையான மருத்துவ உதவிகளுக்கு பகரமாக காசாவில் உள்ள பொதுமக்களுக்கு மருந்துகளுடன் மற்ற மனிதாபிமான உதவியை வழங்குவதற்கு இஸ்ரேல் மற்றும் (ஹமாஸ்) இடையே உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டது” என உத்தியோகபூர்வ கட்டார் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் எகிப்தின் எல் அர்ஷ் நகரில் இருந்து அனுப்பப்பட்ட மருந்து மற்றும் உதவிகள் நேற்று காசா பகுதியை சென்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகமும் இந்த உடன்படிக்கையை உறுதி செய்துள்ளது. இந்த உடன்படிக்கையின் கீழ் நாற்பத்து ஐந்து பணயக்கைதிகளுக்கு மருந்துகள் வழங்கப்படவிருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கு காசாவின் எல்லை நகரான ரபாவில் உள்ள மருத்துவமனை ஒன்றுக்கு நேற்று மருந்துகள் கொண்டுவரப்பட்டதோடு சர்வதேச செம்பிறை சங்கத்திடம் இருந்து அவைகளை பெற்றதாக அந்த மருத்துவமனை குறிப்பிட்டுள்ளது. அந்த மருந்துகள் பிரிக்கப்பட்டு பணயக்கைதிகளுக்கு அனுப்பப்படவுள்ளது.

கட்டார் மத்தியஸ்தத்தினால் பேச்சுவார்த்தை இவ்வாறான மற்றொரு உடன்படிக்கையை விரைவில் எட்டுவதற்கு வழிவகுக்கும் என்று நம்புவதாக அமெரிக்க பாதுகாப்பு கவுன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

**மேலும் 163 பேர் பலி**

தெற்கு காசாவில் குறிப்பாக கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களில் இஸ்ரேல் சரமாரி குண்டு மழை பொழிந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 163 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று (17) தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ரபா நகரின் மத்திய பகுதி மற்றும் சிறிய அகதி முகாமான ஷபூராவில் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்றன. ஷபூராவில் இரு வீடுகள் இலக்கு வைக்கப்பட்டதோடு நான்கு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 10க்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

எனினும் கான் யூனிஸ் நகரிலேயே மிக மோசமான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நகரின் மேற்குப் பக்கமாக பீரங்கி குண்டுகள் விழுந்துள்ளன. அதிகப் பெரும்பான்மையான சிறுவர்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா கூறியது.

இதன்போது கான் யூனிஸின் மேற்குப் பகுதியில் குடியிருப்பாளர்கள் இருக்கும் நிலையிலேயே நான்கு வீடுகள் வான் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதோடு அல் நம்பசாவி பகுதியில் பல குடியிருப்புக் கட்டடங்கள் பிராங்கி தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன. கான் யூனிஸின் மேற்கு மற்றும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் பீரங்கி குண்டுகள் விழுந்துள்ளன.

இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று வரும் பகுதிகள் போரின் ஆரம்பத்தில் பாதுகாப்பு வலயமாக இஸ்ரேலால் அறிவிக்கப்பட்ட பகுதிகளாகும். எனினும் இங்கு தற்போது அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கான் யூனிஸின் நாசர் மருத்துவமனைக்கு அருகாமையில் உக்கிர தாக்குதல்கள் நடத்தப்படும் போக்கு தொடர்ந்து நீடித்து வருவதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் விபரித்துள்ளனர். இந்த மருத்துவமனைக்குச் செல்லும் பிரதான பாதையில் இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக செவ்வாய்க்கிழமை இரவு ரபா நகரின் மேற்காக அல் ஹஷஷின் பகுதியில் பொதுமக்கள் குழு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதல் ஒன்றில் தாய் மற்றும் மகள் இருவரும் கொல்லப்பட்டிருப்பதாக வபா செய்தி வெளியிட்டது.

வடக்கின் ஜபலியா நகரில் இஸ்ரேலிய குண்டு வீச்சில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்படி காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை வேகமான அதிகரித்து வருவதோடு அந்த எண்ணிக்கை தற்போது 24,448 ஆக அதிகரித்துள்ளது. இதில் 70 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

மறுபுறம் காசாவில் உள்ள இஸ்ரேலிய தரைப்படை பலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை தொடர்ந்து சந்தித்து வருகிறது. வடக்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் 32 மற்றும் 34 வயதுடைய மேலும் இரு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்தது.

இதன்படி இஸ்ரேல் இராணுவம் வழங்கி இருக்கும் தரவுகளின்படி காசாவில் கொல்லப்பட்டுள்ள இஸ்ரேலிய வீரர்களின் எண்ணிக்கை 200ஐ நெருங்கியுள்ளது. மேலும் 1,135 படையினர் காயமடைந்துள்ளனர்.

**டெல் அவிவில் ஆர்ப்பாட்டம்**

இதேவேளை இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே செவ்வாய் இரவு மோதல் வெடித்தது. “முற்றுகையை நிறுத்து” மற்றும் “இனப்படுகொலையை நிறுத்து” என்ற பதாகைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணி நடத்தினர்.

“ஆக்கிரமிப்பு இரத்தக்களரிக்கு வழிவகுப்பதோடு அது இடைவிடாது தொடர்ந்து வருகிறது. இப்போது காசாவில் வளரும் பிள்ளைகள் சில ஆண்டுகளில் எம்முடன் சண்டைக்கு வருவார்கள்” என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சாவா லெர்மன் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

“இஸ்ரேலிய குண்டுவீச்சில் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள்” என்று சக ஆர்ப்பாட்டக்காரரான மிச்சால் சப்ரி கூறினார். “இது எதனையும் தராது. எமது பணயக்கைதிகள் தொடர்ந்து அங்கு உள்ளனர். மேலும் இராணுவ சக்தியை பயன்படுத்துவதன் மூலம் நாம் அவர்களை விடுவிக்க மாட்டோம்” என்றும் அவர் கூறினார்.

பணயக்கைதிகளை பாதுகாப்பாக விடுவிப்பதற்கு இஸ்ரேலிய மக்களிடம் இருந்து நெதன்யாகு அரசு கடும் அழுத்தத்தை எதிர்கொண்டுவருகிறது. எனினும் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இராணுவ ரீதியான அழுத்தம் அத்தியாவசியம் என்று அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

மறுபுறம் இந்தப் போர் மத்திய கிழக்கில் போர் நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளது. செங்கடலில் யெமனின் ஹூத்திக் கிளர்ச்சியாளர்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாக்குதல்களை நடத்தி வருவதோடு இஸ்ரேலின் லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லா போராளிகளுடனான மோதலும் நீடித்து வருகிறது.

சர்ச்சைக்குரிய ஷெபா பண்ணை பகுதியில் உள்ள இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மீது ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. தெற்கு லெபனானில் பல ஹிஸ்புல்லா நிலைகள் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலை அடுத்தே இந்த ரொக்கெட் குண்டுகள் விழுந்துள்ளன.

ஷெபா பண்ணை பகுதி லெபனான், சிரிய மற்றும் 1967 போரில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று எல்லைக்கு அருகில் இருக்கும் குறுகிய நிலப்பகுதியாகும்.

மறுபுறம் மேற்குக் கரையில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அங்கு கொந்தளிப்பு சூழல் நீடித்து வருகிறது. இதில் நேற்று துல்கரம் அகதி முகாமில் இஸ்ரேலிய படை புல்டோசர்களைக் கொண்டு உட்கட்டமைப்புகளை தகர்த்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

கார் ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில், கடந்த பல ஆண்டுகளில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பான அஹமது அப்துல்லா அபூ சலால் என்பவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவம் மற்றும் குடியேற்றவாசிகளின் தாக்குதல்களில் குறைந்தது 362 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.